# நல்வழிச் சிறுகதைகள்

## 2

வானதி பதிப்பகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நல்வழிச் சிறுகதைகள்

## இரண்டாம் பாகம்

நாரா. நாச்சியப்பன்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : ஜனவரி, 1965
ஏழாம் பதிப்பு : மே, 1995
எட்டாம் பதிப்பு : மார்ச், 1998

முழு உரிமை வானதி பதிப்பகத்திற்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

---

விலை : ரூ. 10-00

| | | |
|---|---|---|
| Title | : | NALVAZHI SIRUKATHAIKAL PART - II |
| Author | : | NARA. NACHIYAPPAN |
| Subject | : | Short Stories |
| Language | : | Tamil |
| Edition | : | Eighth Edition, March 1998 |
| Pages | : | 84 |
| Price | : | Rs. 10-00 |
| Published by | : | VANATHI PATHIPPAKAM<br>13, Deenadayalu Street,<br>Thyagarayanagar, Chennai-17. |

---

அச்சிட்டோர் :

ஸ்ரீதுர்க்கை பிரிண்டிங் பிரஸ்
21, தென்மேற்கு போக் சாலை,
தியாகராயநகர், சென்னை-600 017.
☎ 433 41 30, 434 68 49

# முன்னுரை

அண்மையில் நடந்த குழந்தைகள் தின விழாவில் பேசும்போது நம் முதல்அமைச்சர் உயர்திரு பக்தவத்சலம் அவர்கள் சின்னஞ் சிறுவர்களுக்காகத் தமிழில் நல்ல பல நூல்கள் வெளிவர வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இதே கருத்தை மனத்தில் வைத்துக் கொண்டு நான் எழுதி வரும் நூல்களிலே மிகச் சிறந்த நூல் 'நல்வழிச் சிறு கதைகள்' என்ற இத்தொகுப்பு நூல்.

குழந்தை மனம் எந்தக் கருத்துக்கும் இடங் கொடுக்கக் கூடியது. குழந்தைப் பருவத்தில் படியும் கருத்துகள்தாம் ஒரு மனிதனை உருவாக்குகின்றன. எனவே குழந்தையுள்ளத்தில் நல்ல பல கருத்துகள் படியவேண்டும்— படியுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த எண்ணத்தை முன் வைத்துத்தான் சிறுவர்கள் படிப்பதற்கென்று நம் தமிழகச் சான்றோர்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி, மூதுரை ஆகிய பல் நீதி நூல்களை இயற்றினார்கள் ; அவற்றையே துவக்கப்பள்ளிகளில் பாடமாகவும் சொல்லிக் கொடுத்தார்கள்.

இந்த நூல்கள் நீதி நூல்களாக மட்டுமன்றி சிறந்த இலக்கியங்களாகவும் திகழ்கின்றன. இவற்றிலே காணப் படும் கருத்துகள் சிறந்த உவமைகளால் அழகு பெறுகின்றன. அந்த உவமைகளையும், கருத்துகளையுமே வைத்துக்கொண்டு பல கதைகளைப் புனைந்துள்ளேன்.

தமிழில் இது ஒரு தனி முயற்சியாகும். இந்த முயற்சி வெற்றி தரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்தக் கதைகளைப் படிப்பதால் சிறுவர் சிறுமியரின் உள்ளம் பண்பட்டு, அவர்கள் வருங்காலத்தில் நல்ல குடி மக்களாகத் திகழ்வார்கள். எவ்வாறெனில், அவர்களை உருவாக்கும் நல்ல கருத்துகளை இவை நயமாக எடுத்துக் கூறுவதால் என்க.

தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் களும், பெற்றோர்களும் பிள்ளைகளின் உள்ளத்தை விரிவடையச் செய்யும் இந்நூலை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று பெரிதும் கேட்டுக் கொள் கின்றேன்.

சென்னை
21-12-64

**நாரா. நாச்சியப்பன்**
நூலாசிரியர்

# மலை நாட்டு வீரன்

வளநாட்டை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு இரண்டு மக்கள் இருந்தார்கள். மூத்தவன் பெயர் அரியநாதன். இளையவன் பெயர் வடுகநாதன்.

அரியநாதனும் வடுகநாதனும் கூடப்பிறந்தவர்களே தவிர, ஒருவருக்கொருவர் பெரும் பகையாயிருந்தனர். சிறு வயது முதலே எதையெடுத்தாலும் இருவருக்கும் போராட்டம்தான்.

இருவருக்கும் சண்டை வரக்கூடாதென்பதற்காக அரசர் எந்தப் பொருளை வாங்கினாலும் இருவருக்கும் சமமாகவே வாங்குவார். அப்படியிருந்தும் அவர்கள் சண்டையிட்டுக் கொள்வார்கள்.

ஒரு நாள் அரசர் அவையில் இருக்கும்போது, அயல் நாட்டிலிருந்து வந்த தூதுவன் ஒருவன், சுவை மிகுந்த மூன்று மாங்கனிகளைக் கொண்டு வந்தான். அரசர் தமக்கு என்று ஒன்றை வைத்துவிட்டு, அரியநாதனுக்கும் வடுகநாதனுக்கும் ஆளுக்கொரு கனியைக் கொடுத்தார்

ந. சி. II—1

இரண்டு மாம்பழங்களும் ஒரே மாதிரியிருந்தன. அவற்றை முன்னிட்டுச் சண்டை வரவே காரண மில்லை. ஆனால், அரியநாதனும் வடுகநாதனும் சண்டையிடாமல் இருக்கவில்லை. அரசரிடமிருந்து மூன்றாவது கனியைக் கேட்டுப் போராடினர்.

பெற்ற பிள்ளைகள் கேட்கும்போது அதைக் கொடுக்க மாட்டேனென்று மறுக்க அரசருக்கு மனம் வரவில்லை. ஆனால், யாருக்குக் கொடுப்பதென்று அவரால் எளிதில் தீர்மானிக்கவும் முடியவில்லை.

ஆனால், யாருக்குக் கொடுப்பது என்பதை அந்தப் பிள்ளைகளே எளிதாக முடிவு கட்டி விட்டார்கள்.

இருவரும் வாட்போர் புரிவதென்றும், வெற்றி பெறுகிறவன் மாங்கனியைப் பெற்றுக் கொள்வ தென்றும் முடிவு கட்டினார்கள். எப்படியாவது பிரச்சினை தீர்ந்தால் போதும் என்று எண்ணிய அரசர், அவர்கள் முடிவிற்கு ஒப்புக் கொண்டார். அதுவே பெருங்கெடுதலாக முடிந்தது.

மாங்கனிக்காக வாட்போர்ப் போட்டியில் இறங்கிய இளவரசர்கள், அது வெறும் போட்டி யென்பதை மறந்து, ஒருவரை யொருவர் கொன்று ஒழிப்பது என்ற நோக்கத்தோடு வாள் சுழற்றத் தொடங்கி விட்டனர்.

போர் தொடங்கிய பிறகு அரசரால் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. கடைசியில் அரியநாதன் படுகாயப்பட்டுப் போரில் தோற்றுக்

கீழே விழுந்தான். அவனைப் பிழைக்க வைக்க அரசர் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

இப்படி இருவருக்கும் எந்நேரம் பார்த்தாலும் சண்டையும் சச்சரவுமாகவே யிருந்தது.

இவர்களில் அரியநாதன் சிறந்த குண முடையவன். வடுகநாதன் நல்ல குணம் சிறிது மற்றவன். பல சமயங்களில் அரசர் அரியநாதனைத் தாழ்ந்து போகும்படி கூறி விடுவார். அரியநாதன் நல்ல குணமுடையவனாயினும், தான் வடுகநாத னுக்கு இளைத்தவனல்ல என்று காட்டிக் கொள்ளும் வீராப்பு அவனிடம் இருந்தது. அரசர் வேண்டு கோளுக்காகவே அவன் பல சமயங்களில் விட்டுக் கொடுத்திருக்கிறான்.

எவ்வளவு அறிவுரைகள் கூறியும் அண்ண னுடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று வடுகநாதன் கருதவே இல்லை.

அரசர் உடல் தளர்ந்து இறப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது, இவர்களைப் பற்றிய கவலை யாகவேயிருந்தார்.

தாம் எவ்வளவோ பாடுபட்டு உருவாக்கிய அரசு, இப்பிள்ளைகளின் ஒற்றுமை யின்மையால் சின்னா பின்னப்பட்டுப் போய்விடுமோ என்று அவருக்கு ஒரே கவலையாயிருந்தது.

தாம் இறக்கு முன் தம் அரசை இருவருக்கும் பிரித்துக் கொடுத்து, இரு வேறு நாடுகளாகச் செய்ய வேண்டும் என்றுதான் எண்ணியிருந்தார். ஆனால்,

பிள்ளைகளின் போக்கை நன்குணர்ந்த மதியமைச்சர் இந்நோக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் நாடு சீர் குலைந்து விடும் என்றே கருதினார்.

அரியநாதன் கையில் முழுப் பொறுப்பையும் ஒப்படைத்து, வடுகநாதனை அவன் கீழ் பணி புரியும்படி செய்ய வேண்டும் என்று மதியமைச்சர் ஆலோசனை கூறினார். இந்த ஆலோசனையை அரசர் ஏற்றுக் கொண்டார். மூத்தவனாகிய அரியநாதனுக்கு முடி சூட்டுவது பொருத்தம் என்று தான் அவர் எண்ணினார்.

சமமாகப் பிரித்துக் கொடுத்தாலே சண்டைக்கு வரக்கூடிய வடுகநாதன், இந்த முடிவையறிந்த போது மிகுந்த ஆத்திரம் கொண்டான். அன்றே அரியநாதனைக் கொன்று விடுவதாகக் கூறி ஆர்ப்பரித்தான்.

அரியநாதன் தன் நண்பர்கள் சிலருடன் வேட்டைக்குச் சென்றிருந்தான். வடுகநாதன் நூறு ஆயுதம் தாங்கிய வீரருடன் வேட்டைக் காட்டை வளைத்துக் கொண்டான். இச்செய்தியைக் கேள்விப் பட்ட அரசர், அன்றே மனமுடைந்து இறந்து போனார். அரியநாதன் தன் நண்பர்களின் உதவியால் வேட்டைக் காட்டிலிருந்து தப்பி விட்டான்.

அரண்மனைக்கு வந்த அவன், அரச பதவி ஏற்றான். தம்பி வடுகநாதனை நாடு கடத்தி விட அப்போதே ஆணையிட்டான்.

அரச ஆணையை மீறி நாட்டில் இருக்க முடியாது. ஆகையால் வடுகநாதன் வளநாட்டை விட்டு வெளியேறினான். பகையரசர் சிலர் உதவியைப் பெற்று அவன் வளநாட்டின் மீது படையெடுத்து வந்தான்.

கூடப்பிறந்த இவன் சிறிது கூட அன்பில்லாமல் நடந்து கொண்டு வருகிறானே என்று அரியநாதன் வருந்தினான். படையெடுப்பை எதிர்த்து நிற்க அவன் தன் போர் வீரர்களை ஆயத்தப் படுத்தினான்.

மலை நாட்டிலிருந்து ஒரு வீரன் வந்தான். அவன் அரசன் அரியநாதனைப் பேட்டி கண்டான். படையில் தன்னை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டினான்.

அவன் எப்படிப்பட்ட வீரனென்று அரிய நாதன் சோதித்துப் பார்த்தான். விற் போட்டியிலும் வாள் போட்டியிலும் அந்த மலை நாட்டு வீரன் வெற்றியுற்றான். அதனால் மனம் மகிழ்ந்த அரிய நாதன் அவனைத் தன் படைத் தளபதிகளில் ஒருவனாக அமர்த்தினான். அந்த மலை நாட்டு வீரன் பழகப் பழக இனியவனாக இருந்தான். விரைவில் அவன் அரியநாதனின் அன்புத் தோழ னாகி விட்டான்.

மலை நாட்டு வீரனும் அரியநாதனும் எப் போதும் ஒன்றாகவே இருந்தார்கள். அரசாங்க நடவடிக்கைகளை இருவரும் கலந்தாலோசித்தே முடிவெடுத்தார்கள். சாப்பிடும் போதும்

வேட்டைக்குப் போகும் போதும் இருவரும் ஒன்றாகவே சென்றார்கள். அவர்கள் பழகிய விதத்தைக் கண்ட மக்கள், 'இவர்கள் அண்ணன் தம்பிகளைப் போல் பழகுகிறார்கள்' என்று பேசிக் கொண்டார்கள்.

மக்கள் தங்களைப் பற்றிப் பேசிக் கொள்ளும் செய்தி ஒரு நாள் அவர்கள் காதுக்கே எட்டியது. இந்தச் செய்தியைக் கேட்டது முதல் அரியநாதன் ஒரு மாதிரியாக இருந்தான். அவன் மனம் எதையோ நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது.

மலை நாட்டு வீரன், அரியநாதன் திடீரென்று கவலைப்படுவதன் காரணத்தைக் கேட்டான்.

"நானும் நீயும் அண்ணன் தம்பி போல் பழகுவதாக மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆனால், எனக்கு உண்மையிலேயே ஒரு தம்பி இருக்கிறான். அவன் உன் மாதிரி என்னுடன் அன்பாகப் பழக வில்லை. பகைவனாகக் கருதிப் பழகுகிறான். இதை எண்ணிப் பார்த்தபோது என் மனம் துன்பமும் கவலையும் அடைகிறது" என்று அரசன் அரியநாதன் கூறினான்.

"அரசே, கவலைப்படாதீர்கள். எனக்கு ஓர் ஆண்டு காலம் தவணை கொடுங்கள். உங்கள் தம்பியை உங்களிடம் அன்புறவு கொள்ளும்படி செய்கிறேன்!" என்றான் மலை நாட்டு வீரன்.

"உண்மையாகவா? உன்னால் முடியுமா?" என்று ஆர்வத்தோடு கேட்டான் அரியநாதன்.

"முடியும்!" என்று உறுதியாகக் கூறினான் மலை நாட்டு வீரன்.

"உன்னால் முடியுமென்றால் முதலில் அதைச் செய். நானும் என் தம்பியும் பிறந்தது முதல் ஒருவரையொருவர் பகைத்தே வாழ்ந்தோம். எந்தச் செயலிலும் நாங்கள் ஒன்றுபட்டு நின்றதேயில்லை. ஒருவரையொருவர் கொன்று விடக் கூடச் சில சமயங்களில் முயன்றிருக்கிறோம். வீரா, உன்னோடு பழகியதிலிருந்து நான் உடன் பிறந்தவர்களிடையே எப்படிப்பட்ட உறவு நிலைக்க வேண்டுமென்பதை உணர்ந்து வருகிறேன்.

"எனக்கு ஏதோ ஓர் ஏக்கம் இப்போது மனத்திலே தோன்றி விட்டது. அண்ணன் தம்பி யாகப் பழக வேண்டிய நாங்கள் இப்போது ஒருவர் மீதொருவர் போர் தொடுத்துக் கொண்டு நிற்கிறோம். உடன் பிறந்தவர்களாயிருந்தும் சுற்றத் தார்களாக இல்லாமல் பகைவர்களாக நிற்கிறோம். எங்கள் வாழ்நாளெல்லாம் இப்படியே பகைமையில் கழிந்து விடுமோ என்று கூடப் பயப்பட வேண்டி யிருக்கிறது. வீரா, நீ எவ்வாறேனும் என் தம்பியை என்னுடன் உறவு கொள்ளச் செய்து விட்டால், உன்னை என் சின்னத் தம்பியாகவே பாவித்து அன்பு பாராட்டுவேன்!" என்றான் அரசன் அரிய நாதன்.

"அரசே, கவலைப்படாதீர்கள். இப்போது கூட நீங்கள் என்னைத் தம்பி போல்தான் நடத்து கிறீர்கள். உங்களுக்கு உங்கள் தம்பியின் மீது அன்பு

சுரந்தது ஒன்றே போதும். உங்கள் தம்பியை உங்களிடம் சேர்க்க, அந்த அன்பே துணை புரியும். நாளையே நான் புறப்படுகிறேன். விரைவில் உங்கள் தம்பியை உங்களிடம் கொண்டு வந்து சேர்க்கிறேன்" என்றான் அந்த மலை நாட்டு வீரன்.

அவன் கூறியபடி மறுநாளே அங்கிருந்து புறப்பட்டான். வடுகநாதனுடைய போர்க் கூடாரத்தில் அவனைப் போய்ச் சந்தித்தான். தன் திறமைகளைக் காட்டி அவனிடம் ஒரு போர்ப் படைத் தலைவனாக வேலையில் சேர்ந்து கொண்டான். பழகப் பழக வடுகநாதனுக்கு அந்த மலைநாட்டு வீரனை மிகவும் பிடித்திருந்தது.

ஒரு நாள் வடுகநாதன் போர் வீரர்களின் கூடாரங்களின் ஊடே பொழுது போக்க நடந்து சென்று கொண்டிருந்தான். ஒரு கூடாரத்தின் அருகே வந்த போது, அங்கு சில வீரர்கள் கூடியிருந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்களின் பேச்சு வடுகநாதன் கவனத்தை ஈர்த்தது.

"அந்த மலை நாட்டு வீரன் வந்து இரண்டு வாரங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் நம் தலைவர் அவனிடம் உறவு கொள்ள ஆரம்பித்து விட்டாரே!" என்றான் ஒரு வீரன்.

"வேலைக்கு வந்தவனைப் போலவா நடத்துகிறார்! தன் தம்பி போலல்லவா நடத்துகிறார்!" என்றான் மற்றொரு வீரன்.

"தம்பி போல நடத்துகிறார்!" என்ற சொற்கள் வடுகநாதன் மனத்தில் ஆழப் பதிந்தன.

அவன் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டான். 'நான் அந்தப் புது வீரனை நடத்துவது தம்பி போல் இருக்கிறதா? என் அண்ணன் என்னை நடத்து வது எப்படியிருக்கிறது? அண்ணன் தம்பிகளாகப் பிறந்த நாங்கள் அண்ணன் தம்பி போல நடந்து கொள்ளவில்லை. ஆனால், எங்கிருந்தோ வந்த இந்த மலைநாட்டு வீரனுடன் நான் பழகுவது அண்ணன் தம்பி போல இருக்கிறது என்கிறார்கள். ஏன் இந்த வேறுபாடு?'— இப்படிப்பட்ட சிந்த னைகள் அவன் மனத்தில் இடம் பெற்றன. இந்தச் சிந்தனைகள் நாளுக்கு நாள் அவன் உள்ளத்திலே வளர்ச்சி பெற்றன.

அந்த மலைநாட்டு வீரன் அவனிடம் மிக அன்பாகப் பழகினான். பண்பாக நடந்து கொண் டான். அவன் ஒரு வேலையை, சொல்லி முடித்த சிறிது நேரத்திற்குள் செய்து முடித்தான். அவன் செய்கை, பேச்சு, புன்சிரிப்பு ஒவ்வொன்றும் வடுகநாதனின் உள்ளத்தில் அன்புணர்ச்சியைத் தூண்டுவனவாகவே இருந்தன.

இந்த அன்புணர்ச்சி வளர வளர, அண்ண னுடன் போயிருந்து தம்பியாக வாழ வேண்டுமென்ற ஒருவிதமான ஆவலும் அவன் உள்ளத்தே தோன்றி வளர்ந்தது. ஆனால் அந்த ஆவலுக்குப் பணி வதற்கு அவனுடைய கர்வ உணர்ச்சி இடங் கொடுக்கவில்லை.

மலைநாட்டு வீரன் ஒருநாள் வடுகநாதனுடன் தனித்திருந்து பேசிக் கொண்டிருந்தான். அப்போது

பேச்சுவாக்கில், தன் அண்ணனுடன் பகைமை ஏற்பட்ட, கதையைக் கூறினான் வடுகநாதன். தன்னை, அண்ணன் நாட்டை விட்டு விரட்டி விட்டதாகக் கூறினான். தன் குறைகளை மறைத்து அவன் தன் அண்ணன் மீது குற்றஞ்சாட்டிப் பேசினான்.

மலைநாட்டு வீரனுக்கு அவர்கள் கதை முழுவதும் நன்றாகத் தெரியும். இருந்தாலும் தெரியாதவன் போலவே பேசினான்.

"அரசே, தங்கள் அண்ணன் தங்களை விரட்டியடித்தது தங்களுக்கு மட்டுமல்ல, அவருக்குமே பேரிழப்புதான். தங்களைத் தன் படைத் தலைவராக வைத்துக் கொண்டு நாட்டை ஆண்டிருந்தால், தங்கள் போர்த் திறமையால், எத்தனை நாடுகளையோ வசப்படுத்தி யிருக்கலாம். நீங்கள் இருவரும் ஒரு பேரரசின் தலைவர்களாக வளர்ந்திருக்கலாம். தங்கள் அண்ணன் தங்களை விரட்டியடித்ததன் மூலம் இந்த வாய்ப்பை இழந்து விட்டார்" என்று மலைநாட்டு வீரன் கூறினான்.

மலை நாட்டு வீரன் வடுகநாதனுடன் சேர்ந்து அரியநாதனைக் குறை கூறிப் பேசினாலும், அது வடுகநாதன் உள்ளத்தைச் சுட்டது.

"அண்ணன் என்னை விரட்டவில்லை; அவன் விரட்டும்படியாக நான்தான் நடந்துகொண்டேன்!" என்று அவன் தன்னைத் தானே நொந்து கொண்டான். மலை நாட்டு வீரன் கூறிய கருத்து அவன் மனதில் ஆழப் பதிந்து பெரிதாக வளர்ந்தது.

'தானும் தன் அண்ணனும் ஒற்றுமையாக இல்லாததால், மற்ற அரசர்களின் துணையை நாட வேண்டிய நிலையில் இருக்கிறோம்; இருவரும் ஒற்றுமையாக இருந்தால் மாபெரும் வெற்றிச் சிறப்பை யடையலாம்,' என்ற எண்ணம் வலுத்தது.

பேசிப் பேசி அந்த மலை நாட்டு வீரன் பாச உணர்ச்சியை வடுகநாதன் உள்ளத்திலே வளரச் செய்தான். கடைசியில் கூடப்பிறந்தவனிடம் சரணடைவதில் அவமானம் எதுவும் இல்லை என்று கருதுகிற அளவுக்கு வடுகநாதன் மனத்தைக் கரைத்து விட்டான் மலைநாட்டு வீரன்.

வடுகநாதன் அண்ணனுக்கு ஒரு சமாதானக் கடிதம் எழுதியிருந்தான். அரியநாதன் தன் அன்பை யெல்லாம் கொட்டி வைத்து, தம்பியை ஆவலோடு வரவேற்கக் காத்திருப்பதாகப் பதில் ஓலை அனுப்பினான்.

போர்க்களத்தில் சந்திக்கவிருந்த அண்ணனும் தம்பியும் அரண்மனையில் சந்தித்தார்கள். மலை நாட்டு வீரனும் கூட இருந்தான்.

அப்போது அரியநாதன் அந்த மலைநாட்டு வீரனை நோக்கிக் கூறினான்:

"உடன் பிறந்த நாங்கள் பகைவராக வாழ்ந் தோம். எங்கள் உடன் பிறந்த பகைமை என்னும் நோய் எங்களைக் கொன்றொழிக்கத் தக்க அளவு

வளர்ந்து விட்டது. ஆனால், மலையில் விளையும் மூலிகை, நோயைக் குணப்படுத்துவது போல், எங்கோ மலைநாட்டிலிருந்து வந்த நீ, எங்கள் பகையைத் தீர்க்கும் மருந்து போல் பயன்பட்டாய்!" என்றான். இந்த வாசகங்கள் அவர்கள் மூவர் மனத்திலும் மகிழ்ச்சியை உண்டாக்கின.

*கருத்துரை:*—உடன் பிறந்தார் யாவரும் சுற்றத்தார் ஆகார்; உடன் பிறந்தவர்களால் ஏற்படும் தீமைகளை, உடன் பிறவாத பிறர் வந்து நீக்குவதும் உண்டு.

★ ★ ★

# நல்லவர் நமசிவாயம்

மதுரையில் கண்ணன் என்று ஓர் இளைஞன் இருந்தான். அவன் பெற்றோர் மிகுந்த ஏழைகள். அதனால் அவர்கள் அவனைப் படிக்க வைக்கவும் இல்லை; அவனுக்குப் பணம் சேர்த்து வைக்கவும் இல்லை.

பெற்றோர் இருந்தபோது கண்ணன் எங்காவது கூலி வேலை செய்து, கிடைத்த பணத்தை அவர்களிடம் கொண்டு வந்து கொடுப்பான். அது அவர்கள் வீட்டுச் செலவுக்குப் பயன்படும். அவர்கள் குடும்பத்தில் ஏழ்மையினால் ஏற்பட்ட துன்பத்தைச் சிறிது குறைக்க அவனுடைய பணம் உதவியாக இருந்தது.

பெற்றோர் இறந்த பிறகு, கண்ணன் தனக்குச் கிடைத்த கூலியை நண்பர்கள் சிலரோடு சேர்ந்து உண்ணுவதிலும், ஊர் சுற்றிச் செலவழிப்பதிலுமாகக் கரைத்து வந்தான். அதனால் அவன் கையில் எப்போதும் காசு மீந்திருப்பதில்லை. அன்றன்று சாப்பாட்டுக்கு அவன் உழைத்தே பிழைக்கவேண்டியிருந்தது.

என்றாவது ஒரு நாள் தலை வலிக்கிறது என்று படுக்க முடியாது; உடல் நோகிறது என்று ஓய்வெடுக்க முடியாது. வேலைக்குப் போகாமல் இருந்தால் கூலி கிடைக்காது. கூலியில்லாவிட்டால், வயிற்றுப் பசியைத் தணிக்க முடியாது. ஆகவே, அவன் பட்டினி இல்லாமல் இருக்க வேண்டும் என்றால், நாள் தோறும் ஓய்வில்லாமல் உழைக்க வேண்டியிருந்தது.

ஒரு முறை கண்ணனுக்கு நன்றாகக் காய்ச்சல் வந்து விட்டது. வேலைக்குப் போக முடியவில்லை. இருந்த பணம் முற்றிலும் வேலைக்குப் போய் வந்த அன்றே தீர்ந்து விட்டபடியால் மருந்து வாங்கக் கையில் காசில்லை.

காய்ச்சலோடு வீட்டில் படுத்துக் கிடைந்த கண்ணன், என்ன செய்வதென்று யோசித்தான்.

கண்ணன் வசித்த அதே தெருவில் நமசிவாயம் என்று ஒரு பெரியவர் இருந்தார். அவர் கண்ணன் தந்தைக்கு நல்ல நண்பர். ஊரில் அவரை நல்லவர் நமசிவாயம் என்றுதான் குறிப்பிட்டுப் பேசுவார்கள்.

கண்ணனுக்கு நமசிவாயத்தின் நினைவு வந்தது. 'அவரிடம் போய் இரண்டு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு வந்து மருந்து வாங்கிச் சாப்பிடலாம். பின்னால், கூலி கிடைக்கிற பணத்தில் அவர் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடலாம்' என்று நினைத்தான்.

காய்ச்சலால் சோர்ந்து போயிருந்த கண்ணன் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டே நமசிவாயத்தின் வீட்டை அடைந்தான். கண்ணனைக் கண்டவுடனே நமசிவாயம் அன்போடு வரவேற்றார். அவன் தந்தை இறந்த பிறகு, அவன் தன் வீட்டுக்கே வராமல் இருந்ததைக் குறிப்பிட்டுக் கோபித்துக் கொண்டார். அவன் உடலைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "கண்ணா, காய்ச்சலுக்கு மருந்து சாப்பிடவில்லையா? உடம்பைக் கவனித்துக் கொள்ளவேண்டாமா?" என்று பரிவோடு கேட்டார். அப்போதே துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு, கண்ணனை மருத்துவரிடம் அழைத்துச் சென்று காட்டினார். மருத்துவருக்கு அவரே பணம் கொடுத்தார். பிறகு, கண்ணனை அவன் வீட்டிலே கொண்டு வந்து விட்டு விட்டுச் சென்றார். சிறிது நேரத்தில் அவர் மனைவி பார்வதியம்மாள், காய்ச்சிய கஞ்சியும் வெந்நீரும் கொண்டுவந்து கண்ணனுக்குக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

நமசிவாயத்தைப் பற்றிக் கண்ணன் எண்ணிப் பார்த்தான். அவர் எவ்வளவு நல்லவர் என்பது அப்போது தெளிவாகத் தெரிந்தது. அவன் அவரிடம் எப்படி இரண்டு ரூபாய் கடன் கேட்பதென்று கூசினான். ஆனால், அவரோ அவன் கேட்கும்வரை காத்திராமல், எவ்வளவு அன்போடு உதவி செய்தார். அப்பா இப்படிப்பட்ட நல்ல நண்பரைப் பெற்றிருந்தது தனக்கு எவ்வளவு உதவியாயிருக்கிறது! தனக்கும் நண்பர்கள் ஏழெட்டுப் பேர் இருக்

கிறார்களே! யாராவது கண்ணன் என்ன ஆனான் என்று எட்டியாவது பார்த்தார்களா?

உடல் நலமடைந்தவுடன் கண்ணன் நமசிவாயத்தைப் போய்ப் பார்த்து வரச் சென்றான். அவர் அவனை அன்போடு வரவேற்றார். எப்படியிருக்கிறான், என்ன வருவாய் கிடைக்கிறது என்றெல்லாம் கேட்டார். கடைசியில் அவர் அவனைக் கடிந்து பேசினார்.

"கண்ணா, நீ செய்வது சரியில்லை. உன் அன்றாடத் தேவைக்கு அதிகமாகவே உனக்குக் கூலி கிடைக்கிறது. கிடைக்கும் பணம் முழுவதையும் நீ செலவழித்து விடுவது சரியில்லை. பணம் சேமித்து வைக்க வேண்டும்; சொல்லப் போனால், உன் செலவுகளைக் குறைத்து அதிகப் பணம் சேமித்து வைப்பதே நல்லதென்பேன்!" என்று நமசிவாயம் கூறினார்.

அவருடைய சொற்கள் கண்ணன் மனத்தில் ஆழமாகப் பதிந்தன. அவர் தன் நன்மைக்காகத் தான் கூறுகிறார் என்று கண்ணன் தெரிந்து கொண்டான். அன்று முதல் அவன் பணம் சேமிக்கத் தொடங்கினான். ஓராண்டுக்குப் பிறகு அவன், தான் சேமித்து வைத்த பணத்தை எண்ணிப் பார்த்த போது அவனுக்கே வியப்பாயிருந்தது. 'இன்னும் நான்கைந்து ஆண்டுகள் சென்றால் நானே பெரிய பணக்காரன் ஆகிவிடுவேன் போலிருக்கிறதே! நமசிவாயத்தின் வழி நல்ல வழிதான்!' என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

ஒரு முறை கண்ணன் தன் நண்பர்கள் சிலருடன் ஆற்றங்கரைக்குக் காற்று வாங்கச் சென்றிருந்தான். காற்று வாங்கிக் கொண்டே வைகையாற்று மணலில் உட்கார்ந்திருக்கும்போது, நண்பர்கள் பல செய்திகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவன், "இந்த உலகம் வரவரக் கெட்டுப்போய் விட்டது. நல்லவர்களைக் காண்பதே அரிதாயிருக்கிறது. சொல்லப் போனால், இந்த உலகத்தில் நல்லவர்களே இல்லை என்றுதான் கூற வேண்டும்!" என்று குறிப்பிட்டான்.

இதைக் கேட்ட கண்ணன் தன் நண்பனுடைய கருத்தை வன்மையாக மறுத்துரைத்தான். நமசிவாயத்தைப் பற்றி அவனுக்கு எடுத்துக் கூறினான். அவருடைய நல்ல பண்புகளைப் போற்றிப் பேசினான். ஊர் மக்களுக்கு அவர் தம்மாலியன்றவரை செய்து வரும் உதவிகளையெல்லாம் விளக்கிக் கூறினான்.

நண்பர்கள், இப்படி ஒரு நல்ல பண்புள்ள மனிதர் இருக்கிறாரா என்று வியந்தார்கள். அதனால் இன்னொரு பலனும் ஏற்பட்டது. அந்த நண்பர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்திற்குப் பக்கத்தில் ஒரு பெரிய மனிதர் உட்கார்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்தார். அவர் இளைஞர்களின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு செல்வந்தர்.

அவர் நமசிவாயத்தின் பண்பு நலன்களைப் பற்றியறிந்து களிப்பு கொண்டார். பின் சில நாட்களில் அவர் நமசிவாயத்தின் நட்புக்குரியவரானார்.

அந்த செல்வந்தர் தன் மகனுக்கு நமசிவாயத்தின் மகளைத் திருமணம் செய்து வைத்தார். நமசிவாயத்தின் மூலம் கண்ணனுடைய நல்ல பண்புகளை அறிந்து அவனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தார்.

இதனால் கண்ணனுக்கு நல்ல குடும்பத் தொடர்பு ஏற்பட்டது. அதோடு தந்தையின் நண்பராயிருந்த நமசிவாயம் அவனுக்கு உறவினருமாகி விட்டார்.

பின்னர் நமசிவாயத்தின் தொடர்பில் அவன் அடைந்த நன்மைகள் மிகப் பல. நல்ல பண்புகள் மிக்க தன் மாமனாரின் தொடர்பால் அவன் அடைந்த நன்மைகளும் பலப்பல.

மதுரையில் குறிப்பிடத் தகுந்த வணிகர்களிலே கண்ணனும் ஒருவனாகி விட்டான். நேர்மையோடு அவன் வாணிபம் செய்து வந்ததால், நாளுக்கு நாள் அவன் செல்வம் வளர்ந்தது.

புதிது புதிதாக அவன் வசதிகளையும் இன்பங்களையும் செல்வங்களையும் அடையும் போதெல்லாம் நமசிவாயத்தை நினைத்துக் கொள்ளத் தவறவே மாட்டான்.

கண்ணன் நல்ல பல பிள்ளைகளைப் பெற்று இன்பமாகப் பல காலம் வாழ்ந்து வந்தான்.

*கருத்துரை :*—**நல்லவர்களைக் காண்பதும் நன்று; நல்லவர்கள் சொல் கேட்பதும் நன்று; நல்லவர்கள் குணங்களைப் பேசுவதும் நன்று; நல்லவர்களோடு சேர்ந்து இருப்பதும் நன்று.**

★ ★ ★

# வீரன் திருமாவலி

தென்பாண்டி நாட்டிலே திருமாவலி என்று ஒரு வீரன் இருந்தான். அவனுடைய வீரச் செயல்களைப் பற்றிக் கேள்விப்பட்ட பாண்டிய மன்னர் அவனை அழைத்துத் தன் தானைத் தளபதிகளிலே ஒருவனாக அமர்த்திக் கொண்டார்.

மன்னரின் படைத்தளபதிகளிலே ஒருவனாகி விட்ட திருமாவலி நல்ல உடற்கட்டுடையவன். பயில்வான் போன்ற பலமுடையவன். பாய்ந்து வரும் குதிரையை எதிரில் நின்று கையினால் பிடித்து அடக்கும் வல்லமை அவனிடம் இருந்தது. தன் முதுகினால் மூச்சைப் பிடித்து யானையின் விலாப்புறத்திலே உந்தித் தள்ளினால் யானை அப்படியே கீழே சாய்ந்துவிடும். வெறும் பலம் மட்டும் உடையவனல்லன் திருமாவலி; திறமையும் மிக்கவன். வாள் வீச்சிலும், வேல் விளையாட்டிலும் வில் வளைத்தலிலும் மிகத் தேர்ந்தவன்.

போர்க்களத்திலே அவன் ஒரு மதயானை போல் திரிந்து விளையாடுவான். அவன் தன் வீர

விளையாட்டைத் துவங்கி விட்டால் பகைவர்கள் பதறியோடுவார்கள்.

திருமாவலி சிறந்த போர் வீரனாக இருந்த தோடு, இறைபக்தி மிக்கவனாகவும் இருந்தான். தொடுத்த போரிலெல்லாம் அவன் வெற்றி வாகையைப் பெற்று வர— அவனுடைய பலம் காரணமா? பக்தி காரணமா? என்று சொல்ல முடியாமல் இருந்தது.

ஒரு முறை தன் மனைவிக்கு நோய் வந்தபோது, இறைவனுடைய திருத்தலங்களுக்கு யாத்திரை செல்வதாக திருமாவலி நேர்ந்து கொண்டான். மனைவி பிழைத்தெழுந்து பல நாட்களான பின்னும், அந்நேர்த்திக் கடன் செலுத்தப்படாமலே இருந்து வந்தது.

ஒரு நாள் அவன் மன்னரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, தன் தல யாத்திரையைத் துவக்கினான்.

திருமாவலி தல யாத்திரை துவங்கிய செய்தியை ஒற்றர்கள் மூலம் சேர மன்னன் அறிந்தான். சேர மன்னன் திருமாவலியின் மேல் ஆத்திரங் கொண்டிருந்தான். ஏனெனில், திருமாவலியின் தலைமையில் வந்த படைதான், சேர நாட்டைப் பாண்டிய நாட்டுக்கு அடிமைப்படுத்தியது. பாண்டிய நாட்டை வெல்லக் கூடிய படைபலம் இல்லாததால், மீண்டும் போர் புரிந்து நாட்டை மீட்கக் கூடிய சக்தி சேரனுக்கு அப்போது இல்லை. ஆனால், தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள,

திருமாவலியைப் பிடித்து வந்து அவமானப்படுத்த வேண்டும் என்று எண்ணினான்.

திருமாவலி, படைத் தளபதியாக இருக்கும்போது அவனைப் பிடிக்க இயலாது. ஆகவே, அவன் தல யாத்திரை போகும்போது பிடித்துவர ஏற்பாடு செய்தான் சேரன்.

சேரனிடம் அர்ச்சுனன் என்றொரு வீரன் இருந்தான். அவன் சூழ்ச்சியிலும் வாள் வீச்சிலும் வல்லவன். அவன் தலைமையில் பத்து வீரர்களை அனுப்பினான் சேர மன்னன். எப்படியும் திருமாவலியைக் கையோடு பிடித்து வரவேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளை பிறப்பித்தான்.

திருமாவலி ஒவ்வொரு தலமாகச் சென்று சிவபெருமானை வழிபட்டுக் கொண்டு வந்தான். திருப்பெருந்துறை என்ற சிவத் தலத்திற்கு அவன் வந்தபோது, அர்ச்சுனனும் பத்து வீரர்களும் அவ்வூருக்கு வந்து சேர்ந்தனர்.

திருமாவலி, திருப்பெருந்துறை இறைவனை வணங்கி விட்டு வெளியில் வந்தான். அவனுடன் கூடவே இரு சிவனடியார்களும் வந்தனர். மூவரும் மற்றொரு திருத்தலத்தை நோக்கிக் காட்டுப் பாதையில் சென்றனர்.

காட்டின் நடுவே திடீரென்று அர்ச்சுனனும் பத்து வீரர்களும் சிவனடியார்களைச் சூழ்ந்து கொண்டனர். திருமாவலியின் தலையிலும் மார்பிலும் கவசமில்லை. உருத்திராக்க மாலையும்

திருநீறும்தான் இருந்தன. கையில் வாள் இல்லை; திருநீற்றுப் பைதான் இருந்தது.

வீரர்களோ வாளை உருவிக் கொண்டு சூழ்ந்து நின்றனர். மற்ற சிவனடியார்கள் இருவரும் மிரண்டு நின்றனர்.

"பேசாமல் எங்கள் பின்னே வாருங்கள். தப்ப முயன்றால் உயிர் பறிபோகும்!" என்று எச்சரித்தான், அர்ச்சுனன். அவன் குரலைக் கேட்டவுடனே, அவன் போர்க்களத்திலே தன்னை எதிர்த்து நின்ற சேர நாட்டு வீரரிலே ஒருவன் என்று திருமாவலி கண்டு கொண்டான்.

அவனுக்குக் கோபம் கொப்பளித்தது. ஆனால், வாள் பிடித்த வீரர் பதினொருவர் முன், வாளைக் கண்டால் நடுங்கும் சிவனடியார் இருவருடன் நிற்கும் தான், என்ன செய்ய முடியும் என்று சிந்தித்தான். பகைவன் கட்டளைக்குப் பணிந்து போவதா என்று அவன் வீர உள்ளம் கேள்வி போட்டது.

"வீரனே, நான் உன்னுடன் வர முடியாது. உங்களில் யாராவது ஒருவன் என்னுடன் மற்போரோ, வாட்போரோ செய்து தோற்கடித்து விட்டால், அதன்பின் வருகிறேன்!" என்று கூறினான் திருமாவலி.

"உன்னோடு இப்போது நாங்கள் போராட வரவில்லை; பிடித்துப் போகத்தான் வந்திருக்கிறோம். மேற்கொண்டு பேசாதே, நட!" என்று ஆணையிட்டான் அர்ச்சுனன்.

"போராடும் நெஞ்சுறுதியற்ற உங்களுக்கு வாள் ஒரு கேடா?" என்று சொல்லிக் கொண்டே திருமாவலி அர்ச்சுனன் மேல் பாய்ந்தான். சிவனடியார் இருவரும் திகிலுடன் ஒதுங்கி நின்றனர். அர்ச்சுனன் கூட வந்த பத்து வீரர்களும் திருமாவலியின் மீது பாய்ந்தனர். 'ஆயுதமற்ற ஒருவன் மீது வாள் பிடித்த பதினோரு வீரர் பாய்கிறோமே, இது சரிதானா? வீரத்திற்கழகா?' என்று அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேயில்லை. கோழையான தங்கள் மன்னன் ஆணையை நிறைவேற்ற அவர்கள் பெருங் கோழைகளாக நின்று செயலாற்றினார்கள்.

திருமாவலி ஆள் எண்ணிக்கையைப் பற்றிக் கவலைப்படவில்லை. அர்ச்சுனன் மீது பாய்ந்து அவனோடு போராடும் போது மற்ற பத்து வீரர்களும், தங்கள் வாள்களால் அவன் முதுகிலும் விலாவிலும் தாக்கிக் காயப்படுத்தினார்கள். அர்ச்சுனனை மடக்கி அவன் கைவாளைப் பறித்த பின் திருமாவலியை அந்தப் பதினோரு பேராலும் எதிர்த்து நிற்க முடியவில்லை! அவன் கைக்கு வந்த வாள், காற்றினும் வேகமாகச் சுழன்றது. எதிர்த்து நின்ற பகை வீரர்களை ஒவ்வொருவராகக் கொன்று தீர்த்தது.

பத்து வீரர்களும் செத்து மடிந்தார்கள். கடைசியில் அர்ச்சுனன்தான் மீந்திருந்தான். "அற்பனே, நான் உன்னை வாள் கேட்டேன். தர மறுத்தாய்! இப்போது நான் உனக்கு வாள் தருகிறேன். வா போராட!" என்று இறந்த

வீரர்களின் வாளில் ஒன்றைத் தூக்கி அவனை நோக்கி வீசினான் திருமாவலி.

அர்ச்சுனனால் அவனை எதிர்த்து நிற்க முடிய வில்லை. விரைவில் அவனும் திருமாவலியின்வாள் வீச்சுக்குப் பலியானான்.

எதிரிகள் பதினொருவரும் இறந்து போயினர். ஆனால், திருமாவலியாலும் நிற்க முடிய வில்லை. எதிர்பாராத விதமாகத் தாக்கப்பட்டதால் அவன் பலவிடங்களில் படுகாயப்பட்டிருந்தான். அதனால் அவன் சோர்ந்து விழுந்தான்.

ஒதுங்கி நின்ற சிவனடியார் இருவரும் அவனருகில் ஓடிவந்தனர். இறக்கும் நிலையில் அவன் இருப்பதைக் கண்டு மனம் பதைத்தனர்.

அவர்களில் ஒருவர் அவனை நோக்கி, "திருமாவலி! பகைவர் எண்ணிக்கையைப் பார்த்த பிறகாவது ஒதுங்கியிருக்க வேண்டாமா? இப்போது உன் உயிர் போகப் போகிறதே! என்ன செய்வோம்?" என்று துடித்தார்.

"உயிரைப் பற்றிக் கவலைப்படுபவன் வீரனா யிருக்க முடியாது. பகைவர்க்குப் பணிந்து மானத்தை யிழப்பதை விட, பதினொருவரைக் கொன்றேன் என்ற புகழோடு இறப்பது சிறந்தது. அதுதான் வீரம்! இந்த வீரம் உங்களுக்கு இல்லாவிட்டாலும் உங்கள் பிள்ளைகளுக்காவது இருக்கும்படி

வளருங்கள்! பாண்டிய நாடு வாழ்க!" என்று கூறிக் கொண்டே திருமாவலி கண்ணை மூடினான். அவனுடைய கடைசி மூச்சு அந்தப் பேச்சோடு நின்று விட்டது.

இந்த நிகழ்ச்சியைப் பாண்டிய மன்னன் கேள்விப்பட்டான்.

பகைவர்கள் யார் என்று தெரியாததால், எதுவும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆனால், திருமாவலியின் குடும்பத்துக்கு வீர மானியங்களும், அவன் பிள்ளைகளுக்கு வீர விருதுகளும் வழங்கிச் சிறப்பித்தான்.

*கருத்துரை:—* மானத்தைப் பெரிதாக மதிக்கும் வீரர்கள் எக்காலத்திலும் பகைவருக்குப் பணிய மாட்டார்கள்.

★ ★ ★

# வல்லவன்பட்டினத்து மல்லன்

வல்லவன்பட்டினம் என்ற ஊரில் திண்ணன் என்றொரு பலவான் இருந்தான். திண்ணன் என்ற பெயரைக் கேட்டாலே அந்த வட்டாரத்தில் உள்ள தீயவர்கள் அஞ்சுவார்கள்.

திண்ணன் நல்ல உடற்கட்டு உடையவன். நாள்தோறும் விடாமல் செய்து வரும் பயிற்சினால் அவன் தன் உடல் வலிவைக் காப்பாற்றி வந்தான். வீரர்களுக்கு உரிய பல அருங் கலைகளில் அவன் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தான். மற்போரிலும், சிலம்பம் ஆடுவதிலும் அவன் மிகுந்த புகழ் பெற்றிருந்தான்.

திண்ணன் இருந்ததால் வல்லவன்பட்டினத்தில் திருட்டு பயமே அற்றுப் போயிருந்தது. அவன் கைப்பிடியில் சிக்கி உயிரை விட்டு விடக் கூடாதென்று திருடர்கள் அந்தப் பக்கமே தலை காட்டாமல் இருந்தார்கள்.

திண்ணனிடம் ஒருநாள் ஒரு மனிதன் வந்து சேர்ந்தான். அவன் தன் பெயர் பஞ்சப்பன் என்று கூறினான். இந்த பஞ்சப்பன் என்ற மனிதன்

பார்ப்பதற்கே ஒடிந்து போன முருங்கை போல் தோற்றமளித்தான். ஊதினால் சாய்ந்து விடும் புல்லரும்பு போல் இருந்தான். எலும்பே வடிவமாக இருந்த அந்த மனிதன், திண்ணனிடம் வந்து தன்னை வைத்துக் காப்பாற்றும்படி வேண்டினான்.

திண்ணனுக்குப் பஞ்சப்பனைப் பார்த்தபோது இரக்கமாக இருந்தது. தான் காப்பாற்றா விட்டால், அவன் இறந்து போக வேண்டியதுதான் என்று எண்ணினான். ஆகவே, அவனைத் தன்னிடத்தில் வைத்துக் கொண்டான்.

பஞ்சப்பனுக்காகத் திண்ணன் அதிகமாக செலவு செய்ய வேண்டி இருக்கவில்லை. ஓர் இட்டிலிக்கு மேல் அவனால் சாப்பிட முடியாது. இரண்டு கவளம் சோற்றுக்கு மேல் அவன் தொண்டையில் இறங்காது.

உணவு செல்லாததால் உடலிலும் வலுவில்லாமல் இருந்தான் பஞ்சப்பன். பிறவியிலேயே அவனுக்கு இந்த மாதிரிக் கோளாறு இருந்ததால், பின்னால் அவனால் தன் உடலை வளப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

பஞ்சப்பன் வலிமை சிறிதும் அற்றவனாக இருந்தும், அவன் வந்த பிறகு, திண்ணனின் புகழ் பெருகியது. புகழ் காரணமாக அவனுக்குச் செல்வமும் குவிந்தது. எல்லாம் பஞ்சப்பன் வந்த நல்ல நேரத்தின் பலன்தான் என்று திண்ணன் மனத்திற்குள் எண்ணிக் கொண்டான்.

திண்ணனுடைய புகழ் பெருகுவதற்குப் பஞ்சப்பனும் ஒரு வகையில் ஓரளவு உதவியாயிருந்தான் என்று சொல்லலாம். ஓங்கி வளர்ந்த திண்ணனுக்குப் பக்கத்தில் பஞ்சப்பன் நிற்கும் போது, திண்ணனுடைய உடலின் தோற்றம் மிகுந்த எடுப்பாகத் தோன்றியது வீமசேனன் மாதிரி அவன் காட்சி அளித்தான்.

திண்ணன் பின்னால் வரும்போது, பஞ்சப்பன் சிறிது தூரம் முன்னால் கட்டியங் கூறிக் கொண்டு போவான்.

"மாவீரர் திண்ணன் வருகிறார்! மல்லிலே வெல்லும் மாவீரர் வருகிறார்! யானையை அடக்கும் ஐயன்! சிங்கத்தை வெல்லும் சீரியர்! புலியைப் புறங்காணச் செய்யும் போர்வீரர்! மாவீரர் திண்ணன் வருகிறார்!" என்று உரத்த குரலில் அவன் கட்டியங் கூறிக் கொண்டு செல்வதைப் பார்த்தாலே கலங்க வேண்டும்.

பஞ்சப்பன் கட்டியங் கூறுவதோடு மட்டும் தன் வேலையை நிறுத்திக் கொள்ளவில்லை. திண்ணனுடன் போட்டியிட வரும் வீரர்களை ஆராய்வதிலும், அவர்கள் கையாளும் சூழ்ச்சிகளைத் தெரிந்து கொள்வதிலும் திறமை மிக்கவனாக இருந்தான். அவனால் திண்ணன் பலமுறை முன்னெச்சரிக்கை யடைந்து போட்டிகளிலே வெற்றி பெற்றிருக்கிறான்.

ஒரு முறை திண்ணனோடு மல் புரிய வந்த ஒரு வீரன் தன் கையில் மிளகாய்ப் பொடியைத் தடவிக்

கொண்டு வந்திருந்தான். போரிட்டுக் கொண் டிருக்கும்போதே, தன் கையைத் திண்ணனுடைய கண்ணில் வைத்து அழுத்தித் தேய்த்தால், கண் எரிச்சல் தாங்க முடியாமல் திண்ணன் திணறுவான்; அப்போது, தான் வெற்றியடைந்து விடலாம் என்று அந்தப் போர் வீரன் எண்ணியிருந்தான். ஆனால், பஞ்சப்பனுடைய மூக்கில் அந்த மிளகாய்ப் பொடியின் வாசம் பாய்ந்து விட்டது. அவன் மல் புரிய வந்த வீரனைக் கையை நன்றாகத் தேய்த்துக் கழுவி விட்டு வரும்படி கட்டளை யிட்டான். அன்று போரில் திண்ணனே வென்றான்.

மற்றொரு முறை போர் புரிய வந்த வீரன் ஒருவன், தன் காற் பெருவிரல் நகங்களை ஊசி போல் கூராகச் சீவி விட்டுக் கொண்டு வந்திருந் தான். மல்லுக்கட்டி நிற்கும்போது பெருவிரலால் திண்ணனைக் குத்தி வருந்தச் செய்து எளிதாக வெற்றி பெற வேண்டும் என்பது அவன் திட்டம். பஞ்சப்பனின் கூரிய கண்கள் அந்தக் கூரான நகங்களைக் கண்டுபிடித்து விட்டன. அவன் உடனே ஒரு சிறு பேனாக் கத்தியை எடுத்து வந்து அந்தக் கூரான நகங்களைச் சீவியெறிந்துவிட்டான். அத்தோடு வந்த வீரனின் திட்டம் தவிடு பொடி யாகி விட்டது. அவன் மல்லுக்கே நில்லாமல் ஓடி விட்டான்.

இப்படிப் பலமுறை திண்ணன் வெற்றி பெறப் பஞ்சப்பனுடைய அறிவு பயன்பட்டிருக்கிறது.

ஆனால் திண்ணன் இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை. ஒருநாள், பஞ்சப்பன் ஏதோ தவறு செய்து விட்டான். அந்தத் தவறு திண்ணனுக்குப் பெரிதாகப் பட்டது. அதனால் கோபமடைந்த திண்ணன், பஞ்சப்பனைத் தன் வீட்டை விட்டு விரட்டியடித்து விட்டான்.

பஞ்சப்பனும் திண்ணனுடைய கோபத்தைப் பொறுக்க முடியாமல் ஓடி விட்டான். அவன் போனது பற்றித் திண்ணன் சிறிதுகூடக் கவலைப் படவில்லை. தனக்கு ஒரு மெய்க் காப்பாளன் போலவும், சிறந்த அமைச்சன் போலவும் விளங்கிய ஒருவனை விரட்டி விட்டோமே என்று அவன் சிறிதுகூட எண்ணிப் பார்க்கவில்லை.

பஞ்சப்பன் போன பிறகு, அயலூரிலிருந்து வல்லவன்பட்டினத்துக்கு ஒரு பயில்வான் வந்திருந் தான். அவன் தன்னுடன் போட்டிக்கு வரத் திண்ணன் ஆயத்தமா? என்று சவால் விட்டழைத் தான். எந்த சவாலையும் திண்ணன் மறுத்துத் தள்ளியதில்லை.

மற்போர் நடைபெற ஏற்பாடாயிற்று. ஊர்ப் பொதுவெளியில் போட்டி நடந்தது. நூற்றுக் கணக் கான மக்கள் போட்டி காணக் குழுமியிருந்தார்கள்.

அயலூர்ப் பயில்வானும், திண்ணனும் அந்த மல்லரங்கில் வந்து நின்றது இரண்டு பெரிய யானைகள் ஒன்றோடொன்று மோதிச் சண்டையிட முனைந்து நிற்பது போல் இருந்தது.

இரண்டு பேரும் தோள் தட்டித் தொடை தட்டி ஆர்ப்பரித்துப் பாய்ந்தனர். ஒருவரை யொருவர் கையினால் பிடித்துக் கையை முறுக்கினர். தோளிலே தோளை யழுத்திச் சாய்க்க முயன்றனர். கட்டிக் கொண்டு புரண்டனர்.

கட்டி புரளத் தொடங்கியவுடன் இடுப்பில் பல ஊசிகள் குத்துவதைப் போல் உணர்ந்தான் திண்ணன். வலி தாளாமல் பிடி நழுவியவுடன் திண்ணனைக் கீழே தள்ளிச் சாய்த்து விட்டான் அந்தப் பயில்வான். தவறான ஆட்டம் என்று சொல்லத் திண்ணன் வாய் திறக்கு முன் அந்தப் பயில்வான் தன் கையைத் திண்ணனுடைய வாய்க்குள் திணித்து அவனைப் பேச விடாமல் செய்து விட்டான்.

திண்ணன் கீழே சாய்ந்துவிட்டதை—அவ்வளவு விரைவில் சாய்ந்து விட்டதைக் கண்டு உள்ளூர் மக்கள் வந்திருந்தனர். நல்லதொரு பந்தயத்தைப் பார்க்க வந்த பலர் சப்பென்று போன இந்தப் போட்டியைக் கண்டு ஏமாற்றமடைந்தனர். தீயவர்கள் சிலரோ, திண்ணன் சாய்ந்ததைப் பெருவெற்றியாகக் கருதிச் சீட்டியடித்துக் கூச்ச லிட்டு ஆரவாரம் செய்தனர்.

அயலூர்ப் பயில்வானே வெற்றியடைந்ததாக அறிவிக்கப்பட்டது. அவனுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன.

திண்ணன் என்றுமில்லாத அவமானத்துடனும், குன்றிய மனத்துடனும் வீட்டுக்குத் திரும்பினான்.

திண்ணனை எளிதாக வெல்ல அந்த அயலூர்ப் பயில்வான் செய்த சூழ்ச்சி இதுதான். தன் இடைத் துணிக்குப் பின்னால் பல சிறு ஊசிகளைப் பொருத்தியிருந்தான். உடலோடு உடல் சேர்த்து அழுத்தும் போது எதிரியின் உடலில் அவை குத்துமாறு அமைக்கப்பட்டிருந்தன ஊசிகள். இந்தச் சூழ்ச்சியை யாரும் கண்டுபிடிக்கவில்லை.

இடையில், சூழ்ச்சிக்கு ஆளான திண்ணனும் அப்போதே சொல்ல முடியவில்லை. அப்போதே சொல்லியிருந்தால், அந்த அயலூர்ப் பயில்வான் திண்ணனிடம் தப்பினாலும் ஊர் மக்களிடம் தப்பிப் போயிருக்க முடியாது.

வெற்றி தோல்வி அறிவிக்கப்பட்ட பின்னர், ஏற்பட்ட ஆரவாரத்தில் திண்ணன் தன் சொல் ஏறாது என்று கண்டு கொண்டான். பேசாமல் வீடு திரும்புவதைத் தவிர, வேறு செய்யத் தக்கது ஒன்றுமில்லை.

வீடு திரும்பும்போது, தன்னுடன் பஞ்சப்பன் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாகயிருக்கும் என்று திண்ணன் எண்ணினான். இம்மாதிரியான சூழ்ச்சிகளைப் பஞ்சப்பன் எளிதாகக் கண்டுபிடித்து விடும் திறமையுள்ளவன். அவனைக் கோபித்து வீட்டை விட்டுத் துரத்தியது தன் தவறு என்று உணர்ந்தான் திண்ணன். அன்றே அவனைத் தேடத் தொடங்கினான்.

*கருத்துரை :—* எவ்வளவு வலிமையுள்ளவர்களானாலும், துணையில்லாமல் ஒரு செயலைச் சிறப்பாகச் செய்ய முடியாது.

⊙ ○ ⊙

# வாதுக்கு வந்த புலவர்

பாண்டிய நாட்டுக்கு ஒரு சமயம் ஒரு பெரிய மனிதர் வந்திருந்தார். அந்தப் பெரியவரின் பெயர் அரிசங்கரர் என்று கூறினார்கள். அவர் வடக்கே யுள்ள காசியைச் சேர்ந்தவர். நான்கு வேதம், ஆறு சாத்திரம், பதினெட்டுப் புராணம், இதிகாசம் எல்லா வற்றிலும் நல்ல தேர்ச்சியும் திறமையும் மிக்க அந்தப் பெரிய மனிதர், தம்முடைய அறிவைத் தாமே பெரிதாகப் போற்றிக் கொண்டார்.

தம்முடைய கல்வித் திறமையை நிலைநாட்டி எல்லா நாடுகளிலும் புகழ்க் கொடி நாட்டிக் கொள்ள வேண்டும் என்று அவர் எண்ணினார். இமயம் முதல் குமரி வரை தமக்கு எவரும் இணையில்லை என்று பெயரெடுக்க அவர் விரும்பினார்.

பரத கண்டத்தில் அக்காலத்தில் ஐம்பத்தாறு நாடுகள் இருந்தன. ஒவ்வொரு நாட்டுக்கும் சென்று, அங்குள்ள கற்றறிந்த புலவர்கள், சமய ஆசிரியர்கள் எல்லோரையும் வாதில் வென்று புகழ்க் கொடி நாட்டினார்.

ஒவ்வொரு நாட்டிலும் தாம் அடைந்த வெற்றியை நினைக்க நினைக்க, அவருக்குத் தற் பெருமை மிகுந்தது. தனக்கு மிஞ்சிய அறிவாளி இந்த உலகத்திலேயே இல்லை என்று எண்ணிக் கொண்டார். இந்த எண்ணம் வலுப்பெற்ற பின், அவர் மற்றவர்களை மதிக்காமல் நடந்து கொள்ளத் தொடங்கினார்.

சோழ நாட்டில் வாதியற்றி வென்ற பின், பாண்டிய நாடு வந்திருந்தார். பாண்டிய நாட்டுக் குப் பின் சேர நாட்டுக்குச் சென்று, தம் வெற்றியை நிலைநாட்டி விட்டுக் கன்னியாகுமரியில் கடலாடித் திரும்புவதென்று முடிவு கட்டியிருந்தார்.

மதுரை நகருக்கு அவர் வந்து சேர்ந்தபோது, நகரெங்கும் அவரைப் பற்றியே பேச்சாக இருந்தது. "பரத கண்டத்துப் பேரறிஞர்; பல்கலையும் வல்ல புலவர்; காசித் தலத்துக் கவிஞர்; அறிஞர் அரிசங் கரர் வந்திருக்கிறார்! அவரை வாதில் வெல்ல யாராலும் முடியாதாம். சங்கத்திலே தங்கத் தமிழா யும் சிங்கப் புலவர்கள் என்ன செய்யப் போகிறார் கள்?" என்றெல்லாம் மக்கள் பேசிக் கொண்டார்கள்.

புலவர்களுக்குச் சிறப்பளித்து வரவேற்கும் பாண்டிய மன்னன், அரிசங்கரரை வரவேற்றுப் பெருமைப்படுத்தினான். அரசவைக்கு வந்த அரிசங் கரர், தம் பெருமைகளை அரசனுக்கு எடுத்துக் கூறினார். தாம் நாடு தோறும் சுற்றிவரும் காரணத்தை விளக்கிச் சொன்னார். தம்முடன்

வாதிட யாரும் வரலாம் என்று சவால் விடவும் அவர் தயங்கவில்லை.

அரசவையிலே நாற்பத்தொன்பது தமிழ்ப் புலவர்கள் இருந்தார்கள். இந்த நாற்பத்தொன்பது பேரும் நாற்பத்தொன்பது திருவிளக்குகளைப் போன்றவர்கள். அறிவுச் சுடர் ஒளிவிட்டு வீசும் திருமுகமும், குன்றென நிமிர்ந்த தோற்றமும், சிங்கத்தின் பெருமிதப் பார்வையும், அத்தனைக்கும் மேலே அடக்கம் நிறைந்த நெஞ்சும் உடைய அறிஞர்கள் அவர்கள்.

அரிசங்கரர் நெடிய உருவமும், நிமிர்ந்த தோற்றமும், தம்மை மிஞ்சிய புலவர் எவரும் இல்லை என்ற அகம்பாவ எண்ணமும், அந்த எண்ணத்தினால் ஏற்பட்ட அலட்சியப் பார்வையும் கொண்டு, பெருமதயானை போன்று, அவையிலே வீற்றிருந்தார்.

அரசவையிலே, புலவர்களின் அறிவுத் திறனை ஆராயும் அந்தப் போட்டியைக் காண மக்கள் வெள்ளம் போல் திரண்டிருந்தார்கள்.

பாண்டிய மன்னன் சங்கத்துப் புலவர்களை நோக்கிப் பேசினான். "காசிப் பெரும் புலவர் அரிசங்கரர் வந்திருக்கிறார். வாதிட்டுப் புகழீட்ட நாடு தோறும் சென்று வந்துள்ளார். இதுவரை சென்றுள்ள நாடுகளனைத்திலும் அவர் வெற்றி பெற்றிருக்கிறார் நம் பாண்டிய நாட்டிலும் தம் பெருமையையும் திறமையையும் நிலை நாட்டிச் செல்ல அவர் எண்ணியுள்ளார். புலவர்களே,

உங்களில் யாராவது அவருடன் வாதிட விரும்புகிறீர்களா ?'' என்று கேட்டார் பாண்டிய மன்னர்.

ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களாகிய சங்கப் புலவர்கள் அனைவரும் வாய் திறவாது அமைதியாக வீற்றிருந்தார்கள். அவர்களில் முதுபெரும் புலவராக வீற்றிருந்த சாத்தனார் பாண்டித் திருநாடனை நோக்கிச் சில மொழிகள் புகன்றார்.

''மன்னவா! உன்னைப் போன்ற அரசர்கள் ஒருவரை யொருவர் போரிட்டு வென்று புகழ் நாட்டலாம். ஆனால், புலவர்கள் தம் புகழை நிலைநாட்ட, வாதிட்டுப் போராட வேண்டியதில்லை. சங்கப் புலவர்கள் இதுநாள்வரை யாருடனும் வாதிட்டதில்லை. ஏன் ? வாது வழி தீது என்பதால்தான்! வென்றவர் எக்களிக்கவும், வெல்லப்பட்டவர் துக்கமிக்குறவும் செய்யும் வாதுக்குத் தமிழ்ப் புலவர்கள் எக்காலத்தும் ஒப்பியதில்லை. சூதும் வாதும் வேதனை செய்யும். அறிவுக்கு எல்லை யில்லை. ஒருவர்க்கு ஒன்று எளிதாகவும், ஒன்று கடிதாகவும் இருக்கும். எதைக் கொண்டு அறிவை அசைக்க முடியும்?

''திருவள்ளுவரை உலகம் உச்சி மீது வைத்துக் கொண்டாடுகிறது. அவர் யாருடன் வாதிட்டு இப் பெரும் புகழைப் பெற்றார்? இரண்டு பேரிதிகாசங்களை இயற்றிய வான்மீகரும் வியாசரும் எங்கே போய் வாதிட்டார்கள் ?''

சாத்தனாரின் இந்தத் தெளிவுரைகளை அரிசங்கரர் என்ற அந்தப் புலவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

"அச்சம் மேலிட்டதால் தமிழ்ப் புலவர்கள் வாதிட முன் வரவில்லை. வாதுக்குத் தப்ப, சாத்தனார் சரியான வழி கண்டுபிடித்து விட்டார்!" என்று ஏளனமாகக் கூறினார்.

தமிழ்ப் புலவர்கள் அமைதியாக இருந்தனர். ஆனால், பெருமக்களை எங்கிருந்தோ வந்த அவர் அலட்சியப்படுத்திப் பேசியதைக் கேட்டுக் குடிமக்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டது.

அங்கு புலவர்களின் அருகில் நின்று கொண்டிருந்த இளைஞன் ஒருவனுக்கு மனம் துடித்தது. மதிவாணன் என்ற அவ்விளைஞன் மன்னனை நோக்கிக் கூறினான்.

"மன்னர் பெருமானே ! சான்றோரை மதியாத தருக்காளராகவுள்ள இப்புலவர், வாதிட்டுத்தான் ஆக வேண்டுமென்று சாதிப்பாரேயானால், அதற்கு நான் முன் வருகிறேன். என்னுடன் வாதிக்கட்டும்."

இவ்வீர உரைகளைக் கேட்ட அரிசங்கரர் குறுநகை புரிந்தார்.

"மிகச் சிறியவன் இப்பையன். இவனா என்னோடு வாதிட முடியும்?" என்றார்.

"சிறியவனானால் என்ன? சீறி வரும் சிங்கக் குட்டிபோல் நிற்கிறானே ! வாது தொடங்கட்டும் !" என்றார் பாண்டியர்.

அரிசங்கரர் கூறினார் : "முதலில் நான் மூன்று கேள்விகள் கேட்கிறேன். அதற்கு

அச்சிறுவன் பதில் கூறட்டும். பின்னர் அவன் கேட்கும் மூன்று கேள்விகட்கு நான் பதில் சொல்கிறேன். இப் பதில்களைக் கொண்டு வெற்றி தோல்வியை முடிவு கட்டலாம்.''

இவ்வாறு கூறிவிட்டு, அரிசங்கரர் மதிவாணனை நோக்கிக் கேள்விகள் கேட்டார். அவன் அவர் கேள்விகட்குச் சட்டுச் சட்டென்று பதில் கூறினான்.

''இந்த உலகத்தை விடப் பெரியது எது?'' என்றார், அரிசங்கரர்.

''உலகத்தைச் சூழ்ந்திருக்கும் வானம்!'' என்றான், மதிவாணன்.

தத்துவ நோக்கத்தோடு கேள்வி கேட்ட அரிசங்கரர் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. ஆனால், அது தவறான பதிலென்று சொல்ல முடியவில்லை.

''மனிதனைச் சிறப்புப்படுத்துவன இரண்டு. அவை என்ன?'' என்று கேட்டார் அரிசங்கரர்.

''மதி நுட்பம்; மன அடக்கம்!'' என்று பதிலளித்தான் மதிவாணன்.

சமய நூல் கருத்துக்களின்படி பதில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார் அரிசங்கரர். ஆனால், மதிவாணனுடைய பதிலை அவரால் மறுத்துரைக்க முடியவில்லை.

"பொருள்கள் புலனாவது எப்படி?" என்று மூன்றாவது கேள்வியையும் கேட்டு முடித்தார் அரிசங்கரர்.

"கண்ணொளியும் விண்ணொளியும் கலந்து!" என்று பதிலளித்தான் மதிவாணன்.

சிறுவன் ஏதாவது ஒன்றைத்தான் சொல்லுவான்; அகப்பட்டுக் கொள்வான் என்று எதிர்பார்த்தார் அவர். ஆனால், மதிவாணன் அவர் எண்ணத்தைத் தவிடு பொடியாக்கி விட்டான்.

அடுத்து மதிவாணன் கேள்வி கேட்க வேண்டிய கட்டம் வந்தது.

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டான் மதிவாணன்.

வேதாந்தத்தில் இந்தக் கேள்விக்கு யாரும் விடையளித்ததே கிடையாது. சிறுவன் சரியான ஆளாக இருக்கிறான் என்று நினைத்துக் கொண்ட அரிசங்கரர், தனக்கு இக்கேள்விக்கு விடை கூறத் தெரியாது என்று சொல்லி விட்டார்.

"நீங்கள் எங்கு செல்லப் போகிறீர்கள்?" என்று கேட்டான் மதிவாணன்.

இறந்தவர்கள் சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போவார்கள் என்பது சமயக் கொள்கை. தான் போக வேண்டிய இடத்தைத் தீர்மானிக்க வேண்டியது ஆண்டவனே தவிரத் தானல்ல என்று எண்ணிய அரிசங்கரர் இக்கேள்விக்குத் தன்னால் விடை கூற இயலவில்லை என்று கூறி விட்டார்.

"உங்கள் மனத்தில் என்ன இருந்தது? என்ன இல்லை?" என்று கேட்டான் மதிவாணன்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்றே அவருக்குப் புரியவில்லை. திருதிருவென்று விழித்தார்.

மன்னர் இளைஞனை நோக்கி, "மதிவாணா, உன் கேள்விகளுக்கு நீயே விடை சொல்," என்று ஆணையிட்டார்.

"புலவர் அரிசங்கரர் சோழ நாட்டிலிருந்து வருகிறார். சேர நாட்டுக்குப் போவோம் என்று நினைத்துக் கொண்டு பாண்டிய நாட்டுக்கு வந்தார். ஆனால், இங்கு தோல்வி யடைந்து விட்டதால், சேரநாடு செல்லாமல் காசிக்கே திரும்பப் போகிறார். இதுவரை தன்னை மிஞ்சிய ஆளில்லை என்ற தற்பெருமை அவர் மனத்தில் இருந்தது; இப்போது அது இல்லை!" என்று தன் மூன்று கேள்விகளுக்கும் உரிய விடைகளைத் தொகுத்துக் கூறினான் மதிவாணன்.

புலவர் அரிசங்கரர் எதிர்பாராத விதமாகத் தாம் அந்த இளைஞனிடம் ஏமாந்து போனதை எண்ணித் தலை குனிந்தார். கூடி நின்ற மக்களோ, இவ்வளவு எளிய பதில்களே சொல்லத் தெரியாத இவர் எப்படி ஐம்பத்து நான்கு நாடுகளிலும் வாதில் வெற்றி பெற்றார் என்று வியப்படைந்தார்கள்.

பாண்டியன் அவரைப் பத்திரமாகக் காசிக்கு அனுப்பி வைத்தான்.

*கருத்துரை:—* **உருவத்தால் சிறியவர் என்று எண்ணி ஒருவர் திறமையைக் குறைவாக மதிப்பிட்டு விடக் கூடாது.**

★ ★ ★

# தம்பி மாணிக்கம்

அக்காலத்தில் பாண்டிய நாட்டைச் சேர்ந்த மீனவன் பட்டி என்ற ஊரில் சாத்தப்பர் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு முத்து வாணிபம் பரம்பரைத் தொழிலாயிருந்தது. கொற்கையில் கிடைக்கும் முத்துக்களைப் பிற ஊர்களில் கொண்டு போய் விற்பது அவருடைய தொழில்.

மீனவன் பட்டியில் அவர்தான் பெரிய செல்வர். ஆகவே, அந்த ஊரில் அவர் தந்நிகரற்று விளங்கினார். சாத்தப்பர் செல்வர். ஆகவே, அவருடைய சுற்றத்தார் பலர் அவர் மாளிகையிலேயே வந்து தங்கியிருந்தனர். சிலர் அவருடைய வாணிகத்திற்குத் துணை புரிந்தனர் சிலர் அவருடைய வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர்; சிலர் ஒன்றும் செய்யாமலே சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

சாத்தப்பருடைய வீடு ஒரு சத்திரம் போல் காட்சியளித்தது. நாள்தோறும் ஐம்பது பேருக்குக் குறையாமல் பந்தியில் உட்காருவார்கள். சாத்தப்பருக்கு இதனால் ஒன்றும் குறை ஏற்பட்டு விட

வில்லை. வாணிகத்தில் நல்ல வருவாய் கிடைத்த தால், அவருக்கு இது ஒரு செலவாகவே தோன்ற வில்லை.

தம் வீட்டில் இவ்வளவு பேர் இருந்து சாப்பிடு கிறார்களே, இதனால் அதிகச் செலவாகிறதே என்று அவர் நினைத்ததேயில்லை. சுற்றத்தார் சூழத் தாம் இருப்பதே இன்பம் என்று கருதினார். தாம் ஈட்டும் பொருள் இத்தனை பேருடைய வாழ்வுக்கும் பயன் படுகிறதே என்று மகிழ்ச்சியடைந்தார். தம்மைச் சார்ந்திருக்கும் அனைவரையும் தொடர்ந்து காப்பாற்ற, மேலும் பணம் திரட்ட வேண்டும் என்ற ஊக்கத்தோடு வாணிகத்தில் அவர் முழு மூச்சாக ஈடுபட்டார்.

ஒரு நாள் ஓர் ஏழைச் சிறுவன் அவரைத் தேடி வந்தான். அவன் வந்து சேர்ந்தபோது, அவர் ஊரில் இல்லை. மறுநாள்தான் அவர் வெளியூரிலிருந்து வந்து சேர்ந்தார். அவர் இல்லாதபோது அவன் அவர் வீட்டில் நுழையவில்லை. வெளியிலேயே நின்றான். வீட்டில் இருந்தவர்கள் அவனைச் சாப்பிட்டாயா என்று கூடக் கேட்கவில்லை. வீட்டு வாசலிலேயே உட்கார்ந்து விட்ட அவனிடம் யாரும் இரக்கம் காட்டவில்லை. அவன் சாத்தப்பர் வரும் வரை பசிக்கும் வயிறோடு வாசலில் உட்கார்ந்திருந் தான்.

சாத்தப்பர் வெளியூரிலிருந்து வந்து, வீட்டு வாசலில் இறங்கினார். படியில் காலடி எடுத்து வைக்கப் போகும் போது, "ஐயா!" என்று ஓர் ஈனக்

குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார். ஒரு புறத்தில் சுருண்டு படுத்திருந்த அந்த ஏழைச் சிறுவன் எழுந்து, அவரை நோக்கி வந்தான்.

"ஐயா, நான் ஓர் ஏழை. என்னை நீங்கள்தான் ஆதரிக்க வேண்டும்!" என்று கெஞ்சும் குரலில் அவன் பேசினான்.

சாத்தப்பர் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

"ஐயா, நீங்கள் என்ன வேலை சொன்னாலும் செய்கிறேன். எனக்கு வயிற்றுக்குச் சோறு போட்டுக் காப்பாற்றினால் போதும்!" என்று மேலும் கெஞ்சினான் அந்தச் சிறுவன்.

சாத்தப்பர் அவனை எதுவும் கேட்கவில்லை. வீட்டினுள் அழைத்துச் சென்று சாப்பாடு போடுமாறு தன் ஆட்களுக்குக் கட்டளையிட்டார்.

அந்தச் சிறுவன் பெயர் மாணிக்கம். அவன் சாத்தப்பர் அனுமதியுடன் வீட்டினுள் புகுந்து விட்டான். அங்கேயே சாப்பிட்டுக் கொண்டு இருந்தான். அவனுக்கு எந்த வேலையும் கொடுக்கப்படவில்லை. சாத்தப்பர் வீட்டில் தேவைக்கு மேல் ஆட்கள் நிறைந்திருந்தார்கள். வேலை எதுவும் பாராமலே சாப்பிட்டுக் கொண்டு பல பேர் இருந்தார்கள். அவரோ தம் வாணிகத்தை நாடி வெளியூர்களில் சுற்ற வேண்டியிருந்தது. வீட்டைக் கவனிக்க ஆள் இல்லை. இந்நிலையில் அங்கு வந்து சேர்ந்த மாணிக்கம் சில நாட்கள் வரை மற்ற சிலரைப் போல்

சாப்பிட்டுக் கொண்டு, வேலை செய்யாமல் இருந்தான்.

ஆனால், வேலை செய்யாமல் இருக்க முடியவில்லை. ஆகவே, தானாக ஒரு வேலையை மேற்கொண்டான். அந்த வீட்டில் அதிகமாக உழைத்தவன் சமையல்காரன்தான். அவனுக்குக் கூட வேலை பார்க்க ஒரே ஒரு வேலைக்காரன்தான் இருந்தான். அத்தனை பேருக்கும் சாப்பாடு தயாரிப்பதில், அவன் நாள்தோறும் மூச்சு வாங்க வேலை செய்ய வேண்டியிருந்தது. மாணிக்கம் சமையல்காரனுக்கு ஒத்தாசையாக வேலை பார்த்தான். சமையல்காரனுக்கும் மாணிக்கத்தை மிகவும் பிடித்திருந்தது.

சாத்தப்பர் வீட்டில் தங்கும் நாட்களில் மாணிக்கம் அவருக்குச் சாப்பாடு பரிமாறுவான். மேலும் அவர் சொல்லுகிற சிறு வேலைகளைக் கவனிப்பான். மற்ற நாட்களில் சமையல்காரனுக்குத் துணையாக வேலை பார்த்துக் கொண்டு இருப்பான்.

சாத்தப்பர் ஒரு நாள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, அவன் ஊர் பேர் முதலியவற்றை விசாரித்தார். மாணிக்கம் தன் குடும்பத்தைப் பற்றிய விவரங்களைக் கூறினான். எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்ட சாத்தப்பர், அவன் தனக்கு உறவு முறையுள்ளவனாக இருப்பதைத் தெரிந்து கொண்டார். அவன் தன்னிடம் வந்து சேர்ந்தது பற்றி மனத்திற்குள் மகிழ்ச்சியடைந்தார்.

மாணிக்கம் தன் தூரத்து உறவினன் என்பதை அவர் அவனுக்குத் தெரிவிக்கவில்லை.

மாணிக்கம் தன் வேலைகளைப் பார்த்துக் கொண்டு, அவர் மாளிகையிலேயே காலம் கழித்து வந்தான்.

ஒரு நாள் சாத்தப்பர் வெளியூருக்குச் சென்றிருந் தார். அன்று இரவு திடீரென்று எதிர்பாராத விதமாக ஆயுதந் தாங்கிய கொள்ளைக்காரர்கள் நூறு பேர் அவருடைய வீட்டை வளைத்துக் கொண்டார்கள். இருந்தவர்களை யெல்லாம் கட்டிப் போட்டார்கள். எதிர்த்தவர்களையெல்லாம் வெட்டிப் போட்டார்கள். வீட்டில் இருந்த பொருள்களையெல்லாம் கொள்ளை யடித்துச் சென்றார்கள்.

சாத்தப்பர் வெளியூரிலிருந்து திரும்பி வந்த போது, வீடு வெறிச்சென்று இருந்தது.

அவருடைய மனைவியும், மகளும், சமையற் காரனும், மாணிக்கமும் மட்டும்தான் வீட்டில் இருந் தார்கள். மற்ற உறவினர்கள் எல்லோரும் போய் விட்டார்கள்.

வீடு கொள்ளை போன செய்தியைக் கேட்டுச் சாத்தப்பர் இடிந்து போனார். போதாக் குறைக்குக் கடன்காரர்கள் வேறு வந்து விரட்டத் தொடங்கி னார்கள். அவர், தம் கையிலிருந்த முத்துக்களை விற்றுக் கடன்களை அடைத்தார். பின் அவர் மிக எளிய வாழ்க்கை நடத்த நேர்ந்தது. அவர் மனைவி

தன் தாய் வீட்டுக்குச் செல்வதாகச் சொல்லி மகளை அழைத்துக் கொண்டு போய் விட்டாள். சமையல்காரனும் வெளியேறிச் சென்று விட்டான்.

கடைசியில் மாணிக்கம் ஒருவன்தான் அவருக்குத் துணையாக அந்த வீட்டில் மிஞ்சினான். அவர் ஏதாவது கொண்டு வந்தால், அதை வைத்துச் சமையல் செய்வான். அவருக்குச் சாப்பாடு போட்டுத் தானும் சாப்பிடுவான். அவர் ஏதும் கொண்டு வரவில்லை யானாலும், வீட்டில் சாப்பாடு தயாராக இருக்கும். மாணிக்கம் மற்ற வீடுகளில் சென்று வேலை செய்வான். அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு, அரிசியும் காய்கறிகளும் வாங்கி வருவான். அவற்றைச் சமைத்து வைப்பான்.

சாத்தப்பருக்கு எத்தனையோ கவலைகள் இருந்தன. ஆனால், சாப்பாட்டுக் கவலை மட்டும் இல்லை. அந்தக் கவலை ஏற்படாதபடி மாணிக்கம் பார்த்துக் கொண்டான்.

ஒரு நாள் சாத்தப்பர் மாணிக்கத்தைப் பார்த்து, "தம்பீ, என்னிடம் கையில் எதுவுமே இல்லை. பிச்சை எடுக்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டேன். எல்லோரும் போய் விட்டார்கள். நீ மட்டும் ஏன் இருக்கிறாய்?" என்று கேட்டார்.

"ஐயா, எல்லோரும் போய்விட்டால் என்ன ஆவது? நான் துன்பப்பட்ட காலத்தில் நீங்கள் அன்போடு வரவேற்று ஆதரித்தீர்கள். உங்கள் துன்பத்தில் நான் உதவ வேண்டியது என் கடமை

அல்லவா! என்னால் முடிந்தவரை உங்களுக்கு உதவியாயிருக்க வேண்டும் என்பதற்காகவே இங்கு இருக்கிறேன்!" என்றான் மாணிக்கம்.

அதைக் கேட்ட சாத்தப்பருக்குக் கண்களில் நீர் தளும்பியது.

"தம்பி மாணிக்கம், நீதான் என் உண்மையான உறவினன். துன்பத்திலும் துணையாக நிற்கும் நீதான் என் அன்புக்குரிய உறவினன்!" என்று உணர்ச்சியோடு கூறினார்.

பிறகு தம் மாளிகையை விற்றுக் கிடைத்த பணத்தைக் கொண்டு மீண்டும் முத்து வாணிபம் செய்தார். மிக விரைவில் அவர் மீண்டும் பழைய நிலைக்கு வந்து விட்டார். நாணயமும் நேர்மையும் அவருடைய வேகமான முன்னேற்றத்துக்குக் காரணமாயிருந்தன.

மாணிக்கம் கடைசிவரை அவரை விட்டு நீங்கவில்லை. அவரும் கடைசிவரை மாணிக்கத்தைத் தம் கூடவே வைத்துக் கொண்டார். சமையல் வேலையில் மட்டுமல்லாமல், முத்து வாணிகத்திலும் அவருக்குத் துணையாயிருந்தான் மாணிக்கம்.

புதிய செல்வத்தைக் கொண்டு, சாத்தப்பர் இரண்டு மாளிகைகள் கட்டினார். ஒன்று, அவருக்கு; மற்றொன்று, மாணிக்கத்துக்கு.

*கருத்துரை:—* **ஒருவன் துன்பமுற்ற காலத்தில் அவனை விட்டு ஓடிப் போவோர் உண்மையான உறவினர் ஆகார். எக்காலத்திலும் கூட இருப்பவர்களே உண்மை உறவினராவர்.**

★ ★ ★

# நீராம்பல் பூ

செல்வனும் செல்வியும் ஒரு நாள் குளத்திற்குச் சென்றார்கள். குளத்தில் ஆம்பல் பூ பூத்திருந்தது. தண்ணீரின் இடையில் அது தலை தூக்கி நின்ற காட்சி அவர்கள் மனத்தைத் தொட்டது.

அப்போது வெயில் காலம். குளத்தின் நீர் நாளுக்கு நாள் வற்றிச் சுருங்கிக் கொண்டிருந்தது. பத்து நாள் கழித்து அவர்கள் குளத்தின் பக்கம் சென்றபோதும், அந்த நீராம்பல் தண்ணீரில் தலை தூக்கி நின்றது.

"செல்வீ, பார்த்தாயா ! பத்து நாளைக்கு முன் தண்ணீர் உயரத்தில் நின்ற போது, இந்த நீராம்பல் பூவும் உயரத்தில் நின்றது. இப்போது தண்ணீர் இறங்கிய பின், அதுவும் இறங்கி விட்டது!" என்றான் செல்வன்.

"செல்வா, அது மெல்லிய பூங்கொடிதானே ! அதனால் எப்படி நிமிர்ந்து நிற்க முடியும்? அதனால் தான் தண்ணீரோடு இறங்கி விட்டது!" என்றாள் செல்வி.

குளத்தில் நாளுக்கு நாள் தண்ணீர் வற்றிக் கொண்டே வந்தது. செல்வனும் செல்வியும் வரும் போதெல்லாம் அந்த நீராம்பல் பூவைப் பார்க்காமல் போக மாட்டார்கள். அதுவும் தண்ணீர் இறங்க இறங்கத் தானும் இறங்கிக் கொண்டே வந்தது கடைசியில் குளம் மிக மிக வற்றிச் சேறும் சகதியு மாகி விட்டது. அப்போதும் அந்த ஆம்பல் பூ அந்த சகதிக் குழம்பின் மேல்தான் நின்றது. உயரமாக நீட்டிக் கொண்டு நிற்கவில்லை.

இன்னும் இரண்டு மூன்று நாட்களில் மழை பெய்யாவிட்டால், குளம் வறண்டு போகும் என்று பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள். குளம் வறண்டு போனால், ஆம்பலும் கருகிப் போகுமே என்று செல்வனும் செல்வியும் வருந்தினார்கள்.

அன்று ஒருநாள் இரவு மழையடித்து ஊற்றியது. அந்த மழையில் குளம் நிரம்பி விட்டது. ஐயோ, பாவம்! குளத்தில் இருந்த பூ தண்ணீருக்குள் அமுங்கி அழுகிப் போயிருக்கும் என்று குழந்தைகள் பேசிக் கொண்டார்கள். அவர்கள் மறுநாள் காலையில் குளக்கரைக்கு வந்து பார்த்தபோது, ஆம்பல் பூ தண்ணீருக்கு மேலே தலை நீட்டிச் சிரித்துக் கொண்டு நின்றது.

"பூ அழுகவில்லை!" என்று மகிழ்ச்சியோடு கூவிக் குதித்தார்கள் குழந்தைகள்.

கருத்துரை :— **நீர் எந்த அளவு நிற்கிறதோ, அந்த அளவு தான் நீராம்பல் பூவும் நிற்கும். ஒருவன் எந்த அளவு நூல்கள் கற்றிருக்கிறானோ, அந்த அளவுதான் அவ னுடைய கூரிய அறிவும் அமைந்திருக்கும்.**

★ ★ ★

# மாமரம்

கந்தன் வீட்டுத் தோட்டத்திலே ஒரு மாமரம் நின்றது. அந்த மாமரம் ஆண்டு தோறும் சித்திரை மாதத்திலே காய் காய்க்கும். சித்திரை மாத இறுதியில் அல்லது வைகாசி மாதத் துவக்கத்தில் அக்காய்கள் பழுக்கும்.

பழங்கள் மிகச் சுவையானவை. அந்தப் பழங்களைத் தேடி வந்து விலை கொடுத்து வாங்குவோர் பலர். அதனால், மாமரம் பழுத்தவுடன் கந்தனுக்கு நிறையப் பணம் கிடைக்கும்.

இருப்பது ஒரு மாமரம்தான். அதில் கிடைக்கும் பழங்களும் ஓரளவுதான். அதுவும் ஆண்டுக்கு ஒரு முறைதான் கிடைத்து வந்தது.

கந்தனுக்கு ஒருநாள் திடீர் என்று ஓர் எண்ணம் தோன்றியது. இந்த மாமரம் ஆண்டுக் கிரண்டு முறை பலன் தந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இந்த எண்ணம் தோன்றியது முதல் கந்தனுக்குத் தூக்கமே இல்லை.

மாமரத்தை ஆண்டில் இரு முறை பழுக்க வைப்பதற்கு என்ன செய்யலாம் என்று அவன்

சிந்தித்தான். மாமரத்திற்கு வளம் தரக்கூடிய உரங்களைக் கொண்டு வந்து போட்டான். மாமரத்திற்கு நாள்தோறும் நீர் பாய்ச்சி வந்தான். அந்த நீர் தேங்கி தூர் அழுகி விடாதபடி பார்த்துக் கொண்டான்.

புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் மாமரம் காய் காய்க்கும் என்று எதிர்பார்த்தான். ஆனால், பூக் கூடப் பூக்கவில்லை. அடுத்த மாதங்களிலாவது பலன் கிடைக்குமா என்று எதிர்பார்த்தான். ஏமாற்றமேயடைந்தான்.

வழக்கம்போல் மாமரம் சித்திரை மாதத்தில் தான் காய் காய்த்தது.

ஆனால், அந்த ஆண்டு வழக்கத்தைவிட அதிகமான பழங்கள் கிடைத்தன. அவை மிகுந்த சுவையாகவும், பெரியனவாகவும் இருந்தன. முடிவில் கந்தன் ஓர் உண்மையை அறிந்து கொண்டான். மாமரம் ஆண்டுக்கு ஒரு முறைதான் பலன் தரும். உரமிட்டால் அதிகப் பலன் தரும் என்பதுதான் அந்த உண்மை.

*கருத்துரை :—* எவ்வளவு முயற்சி செய்தாலும் பலன் கிடைக்கும் காலத்தில்தான் கிடைக்கும். ஆனால், முயற்சிக்குத் தக்க பலன் உறுதியாகக் கிடைக்கும்.

★ ★ ★

# பாரிக்கு நிகரானவன்

பாண்டிய மன்னனின் அரசவைக்கு ஒரு புலவர் வந்திருந்தார். அவர் எங்கோ வெளி நாட்டிலிருந்து வந்திருந்தார். பாண்டியனைப் போற்றி அவர் ஒரு கவிதை எழுதிக் கொண்டு வந்து படித்தார்.

அவர் கவிதையின் பொருள் பாண்டியன் மனதைத் தொடவில்லை. அவைப் புலவர் பக்கம் திரும்பினார். கவிதை நன்றாக இல்லை என்று பொருள்படும்படி இரண்டு கைகளையும் விரித்துக் காட்டினார், அவைப் புலவர்.

சிவபிரானே பாண்டியனாகப் பிறந்து இந்த உலகத்தைக் காத்து வருவதாகக் கவிதையில் கூறப் பட்டிருந்தது.

பாண்டியனின் வீரம், கொடை முதலிய பண்பு களைப் போற்றி வாழ்த்திப் பாடப் பெற்றிருந்தது அந்தச் செய்யுள்.

பாண்டியன் அந்தப் புலவருக்குப் பத்துப் பொன் பரிசு கொடுக்கும்படி கட்டளை பிறப்பித்தான். புலவர் பெருமகிழ்ச்சியுடன் பொன்னை வாங்கிக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்.

அந்தப் புலவர் சென்ற பின், அவைப் புலவர் அரசனை நோக்கி, "அரசே, அந்தக் கவிதையில் ஒன்றுமில்லை என்பதற்காகவல்லவா நான் இரண்டு கைகளையும் விரித்துக் காண்பித்தேன். தாங்கள் என் கை விரல்களை எண்ணிக் கொண்டு, பத்துப் பொன் கொடுக்கச் சொன்னீர்களோ?" என்று கேட்டார்.

"அல்ல, அல்ல, கவிதைக்காக நான் பரிசு கொடுக்கவில்லை. அந்தப் புலவரின் வறுமையைப் போக்கவே பரிசு கொடுத்தேன். பாவம், வயிற்றுக் கொடுமையால் அல்லவா என்னையே இறைவனாக்கி விட்டார்!" என்று அறிவிலும் திருவிலும் பெரியவரான அந்தப் புலவருக்காக இரக்கப் பட்டான் பாண்டியன்.

அதைத் தொடர்ந்து வள்ளன்மையைப் பற்றி அவையில் பேச்சு எழுந்தது. பாரி, ஓரி முதலிய கடையெழு வள்ளல்களுக்குப் பின், தமிழ் நாட்டில் வள்ளல்களே பிறக்கவில்லை என்று ஒருவர் கருத்துச் சொன்னார்.

கொடை வழங்கு பட்டி என்ற ஊரில் அறம் வென்றான் என்ற வணிகன் ஒருவன் இருப்பதாகவும், அவன் செய்யாத அறம் இல்லையென்றும், அவையில் ஒருவர் கூறினார்.

அறம் வென்றானுடைய பெருமைகளை ஐந்தாறு பேர் பேசத் தொடங்கி விட்டனர். கொடை கொடுப்பதிலும், புலவர்க்குப் பரிசு வழங்குவதிலும், அவன் பாரிக்குச் சளைத்தவனல்லன் என்று ஒருவர் கூறினார்.

பாண்டியனால் இப்பேச்சுகளை நம்ப முடிய வில்லை. ஒரு வணிகன் அவ்வளவு அற நோக்கம் கொண்டவனாக இருப்பானா என்பது அவனுக்கு வியப்பாகவே யிருந்தது.

அறம் வென்றான் என்ற வணிகனுடைய வள்ளன்மையை நேரில் அறிந்து வர வேண்டும் என்று பாண்டியன் எண்ணினான்.

மறுநாளே அவன் மாறு வேடத்தில் கொடை வழங்கு பட்டிக்குப் புறப்பட்டான். மன்னன் தலைநகரை விட்டுச் சென்ற செய்தி யாருக்கும் தெரியாது.

கொடை வழங்குபட்டியை நெருங்க நெருங்க, அறம் வென்றானின் புகழ் பாண்டிய மன்னன் காது களில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. பாணர்களும் விறலியரும் அறம் வென்றானின் புகழ் பாடியாடினர் புலவர்கள் அறம் வென்றானை வாழ்த்திப் பாடிய பாடல்கள் சிறுவர்களால் பாடப் பெற்றன.

இரவலர்கள் அறம் வென்றானைத் தேடிச் சென்ற வண்ணம் இருந்தனர்.

கடைசியாகப் பாண்டியன் கொடை வழங்கு பட்டிக்குப் போய்ச் சேர்ந்துவிட்டான். அவன் அங்கு போய்ச் சேர்ந்தபோது, இருட்டத் தொடங்கி விட்டது.

கொடை வழங்குபட்டியின் ஒரு வீதி வழியாக மாறு வேடத்தில் இருந்த மன்னன் சென்று கொண் டிருந்தான். ஒரு வீட்டில் ஒரு கிழவி பரிதவித்துப்

புலம்பிக்கொண்டிருந்த ஒலி கேட்டது. மன்னன் அந்த வீட்டை நெருங்கினான். கதவு அடைத்துக் கிடந்தது. சாவித் துளையின் வழியாக அவன் உள்ளே எட்டிப் பார்த்தான்.

கூடத்தில் ஒரு சிறு விளக்கு மினுக் மினுக் கென்று எரிந்து கொண்டிருந்தது. பாயில் ஓர் இளம் பெண் நோயாகப் படுத்திருந்தாள். எலும்பு வடிவ மாகக் களையிழந்து கிடந்த அந்தப் பெண்ணின் கதி எப்படி முடியுமோ என்று கலங்கிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் கிழவி.

பாண்டியன் கதவைத் தட்டினான். கிழவி எழுந்து வந்து கதவைத் திறந்தாள்.

முன் பின் அறியாத ஒரு மனிதனைக் கண்ட தும், அவள், "என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

"அம்மா, நான் வெளியூரைச் சேர்ந்தவன். வீதி வழியாய்ப் போய்க் கொண்டிருக்கும் போது, இங்கு அழுகுரல் கேட்டது. என்ன என்று தெரிந்து கொள்ளவே வந்தேன்," என்றான் மாறு வேடத்து மன்னன்.

"ஐயா, என் மகள் படுத்த படுக்கையாய்க் கிடக் கிறாள். இந்த ஊர் மருத்துவரோ பணமில்லாமல் கை பார்க்க மாட்டார். எங்களிடம் பணம் இல்லை. நாளுக்கு நாள் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கும் அவளைப் பார்க்கப் பார்க்க எனக்கு அழுகை அழுகையாக வருகிறது!" என்று கிழவி மீண்டும் அழத் தொடங்கி விட்டாள்.

"அம்மா, ஆக வேண்டியதைச் செய்யாமல், அழுது கொண்டிருந்தால் என்ன பயன்?" என்று கேட்டான் மன்னன்.

"ஐயா, நான் கிழவி! என்னால் என்ன முடியும் ?" என்று கேட்டாள் கிழவி.

"அம்மா, நான் உங்கள் மகளைப் பார்க்கலாமா?" என்று கேட்டான் அரசன்.

கிழவி உள்ளே கூட்டிச் சென்று, தன் மகளைக் காட்டினாள்.

பாண்டியன் அப்பெண்ணைக் கூர்ந்து நோக்கினான். அன்றே ஏதாவது செய்யாவிட்டால், மறுநாள் நம்ப முடியாது என்று தோன்றியது.

"அம்மா, இந்த ஊரில் இருந்து கொண்டே இப்படி நோயை வளரவிட்டு விட்டீர்களே! வணிகர் அறம் வென்றானிடம் சென்று ஏதாவது உதவி கேட்டு வாருங்கள். நான் அதுவரை உங்கள் மகளைப் பார்த்துக் கொண்டு இருக்கிறேன்," என்றான் மன்னன்.

"அப்பா! நீ நன்றா யிருப்பாய்! எல்லோரும் அறம் வென்றானைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறார்கள். இருந்தாலும் எனக்கு இதுவரை இந்த எண்ணம் வரவேயில்லை. இப்போதே நான் போய் வருகிறேன்," என்று சேலையை இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டு, கிழவி விரைந்து நடந்தாள்.

சிறிது நேரம் சென்ற பின், கிழவி திரும்பி வந்தாள். ஆனால், சென்றபோது இருந்த களை அப்போது அவள் முகத்தில் இல்லை. முன்னிலும் வாடித் தளர்ந்த முகத்துடன் அவள் திரும்பி வந்தாள்.

"என்ன ஆச்சு?" என்று கேட்டான் பாண்டியன்.

"அவனா அறம் செய்கிறான்? எல்லாம் வெளிப் பகட்டு. இரவிலே யாருக்கும் எதுவும் கொடுக்க மாட்டானாம். பகலிலேதான் கொடுப்பானாம்; அதுவும் வீட்டிலே கொடுப்பதே வழக்கம் இல்லையாம்! கோயில் வாசலிலேதான் கொடுப்பானாம்!" என்று கூறிச் சலித்துக் கொண்டே உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கொண்டாள் கிழவி.

அவள் மூச்சு விடும் வேகத்தை விட, இதயம் அதிக வேகமாகத் துடித்தது.

உடனே அந்தப் பெண்ணை மருத்துவர் வீட்டுக்குக் கொண்டு போக வேண்டும். "அம்மா, சிறிது நேரம் இருங்கள். எங்காவது போய் வண்டி கிடைக்கிறதா என்று பார்த்து வருகிறேன்," என்று கூறிவிட்டுக் கிழவியின் பதிலுக்குக் காத்திராமலே வெளியில் வந்தான் மன்னன்.

அதே நேரம், அந்தத் தெரு வழியாக ஓர் இரட்டை மாட்டு வண்டி வந்து கொண்டிருந்தது. பாண்டியன் அந்த வண்டிக்காரனை நிறுத்தினான்.

"ஐயா, இங்கே ஒரு பெண் நோயுற்றுக் கிடக்கிறாள். அவளை மருத்துவர் வீட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். நாங்கள் ஏழைகள்! வண்டிக்குக் கூலி தர இயலாது!" என்று கூறினான் பாண்டியன்.

"ஐயா, கூலி தரா விட்டால் ஒன்றும் கெட்டுப் போகப் போவதில்லை. ஆனால், மருத்துவர் கூலியில்லாமல் மருந்து கொடுக்க மாட்டாரே!" என்றான் வண்டிக்காரன்.

"அதெல்லாம் அங்கே போய்ப் பார்த்துக் கொள்ளலாம். முதலில் அவளை மருத்துவர் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்போம்!" என்றான் பாண்டியன்.

பாண்டியனும் அந்த வண்டிக்காரனும் அந்தப் பெண்ணைப் படுக்கையோடு அப்படியே தூக்கிக் கொண்டு வந்து வண்டியில் கிடத்தினார்கள். கிழவியும் ஏறிக் கொண்டாள்.

வண்டிக்காரன் முன்னால் ஏறி உட்கார்ந்து கொண்டு, மிக மெதுவாக வண்டியை ஓட்டிச் சென்றான். பாண்டியன் வண்டிக்குப் பக்கத்திலேயே நடந்து சென்றான்.

வழியில் பாண்டியன் அந்த வண்டிக்காரனோடு பேச்சுக் கொடுத்து அவனைப் பற்றி நன்றாக விசாரித்து தெரிந்து கொண்டான். அவன் பெயர் பொன்னன் என்று தெரிந்து கொண்டான்.

"பொன்னையா, நீங்கள் உள்ளூர்க்காரராச்சே, அந்த மருத்துவரிடம் சொல்லி இந்த ஏழைப்

பெண்ணுக்கு இலவசமாக மருத்துவம் செய்யும்படி கேட்டுக் கொள்ளக் கூடாதா ?" என்று பாண்டியன் கேட்டான்.

"கேட்கிறேன். ஆனால், அந்த மருத்துவன் மிகுந்த பண ஆசை கொண்டவன். இருந்தாலும் நான் எப்படியும் இலவச மருத்துவம் பார்க்கச் செய்து விடுகிறேன் !" என்று உறுதிக் குரலில் கூறினான் பொன்னன்.

"அவ்வாறு செய்தால், பொன்னையா ! உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு !" என்றான் பாண்டியன்.

"புண்ணியத்தை விட்டுத் தள்ளுங்கள். ஒருவருக் கொருவர் இரக்கப்படா விட்டால், அது என்ன மனிதத் தன்மையா?" என்று கேட்டான் பொன்னன்.

மருத்துவர் வீடு வந்து விட்டது. மருத்துவர் வீட்டுத் திண்ணையில் அந்தப் பெண்ணை இறக்கிப் படுக்க வைத்தார்கள்.

பொன்னன் கதவைத் தட்டினான். மருத்துவர், "யாரது இந்த இருட்டு நேரத்தில் ?" என்று கடிந்து கொண்டே, கதவைத் திறந்தார். வந்திருந்தவர்கள் அத்தனை பேருடைய ஏழைக் கோலத்தையும் கண்டு, அவருக்கு எரிச்சல்தான் வந்தது.

"பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா ? அவசர மருத்துவ உதவிக்கு இரட்டிப்புக் கூலி தர வேண்டும் !" என்றார்.

"ஐயா, என்னைத் தெரியவில்லையா? பொன்னன்!" என்று கூறினான் வண்டிக்காரன்.

"பொன்னனாயிருந்தாலும் கண்ணனாயிருந்தாலும் கூலி வேண்டும் முதலில்."

மருத்துவரின் கண்டிப்பான பேச்சைக் கேட்டவுடன்,பொன்னன் ஆத்திரங் கொண்டான். ஆனால், அதை அடக்கிக் கொண்டு பேசத் தொடங்கினான்.

"ஐயா, மருத்துவரே! செய்த உதவியைச் சொல்லிக் காட்டுவது சிறப்பல்ல. ஆனால், காலம் அவ்வாறு சொல்ல என்னை ஏவுகிறது. அன்றொரு நாள் காட்டு வழியில் கள்வர்கள் கையில் சிக்கி உயிரிழக்க இருந்த உங்களை நான் காப்பாற்றினேன். அதற்கு நீங்கள் நன்றி சொன்னீர்கள். அந்த நன்றியைச் செயலில் காட்ட வேண்டுகிறேன். அன்று உங்கள் உயிரை மீட்டதற்கு நன்றியாக இந்தப் பெண் உயிரைக் காப்பாற்ற வேண்டுகிறேன்!" என்று பொன்னன் கூறியவுடன், மருத்துவர் மனம் மாறியது.

அவர் அந்தப் பெண்ணின் கையைப் பார்த்தார். மருந்து கொடுத்தார். ஒரு வாரம் வரை தன் வீட்டிலேயே வைத்து மருந்து கொடுத்துக் காப்பாற்றுவதாக வாக்களித்தார்.

அதன் பின், பொன்னனும், பாண்டியனும் அங்கிருந்து புறப்பட்டனர்.

பொன்னன் வீடிருக்கும் தெருவைக் கேட்டுக் கொண்டு, அவனைப் பிரிந்த பாண்டியன், ஊருக்கு

வெளியில் வந்தான். அங்குள்ள ஒரு மரத்தடியில் கட்டிக் கிடந்த தன் குதிரை மீது ஏறி மதுரை வந்து சேர்ந்தான்.

மறுமுறை அரசவையில் அறம் வென்றானைப் பற்றிப் பேச்சு வந்தபோது, பாண்டியன் இந்த நிகழ்ச்சியைச் சொல்லி, "அறம் வென்றான் பாரியின் கால் தூசுக்குக் கூடக் காணாதவன். அவனிடம் அற உணர்வேயில்லை. எல்லாம் வெளிப் பகட்டு. பொன்னனை வேண்டுமானால் பாரிக்கு நிகராகச் சொல்லலாம். பாரியிடம் இருந்த செல்வம் பொன்னனிடம் இல்லையே தவிர, பாரியின் கருணையுள்ளம் அவனிடம் பொருந்தியிருக்கிறது!" என்று சொன்னான்.

பாண்டியன் வாழ்த்துக்கு ஆளான பொன்னன், பின்னால் பல நலங்கள் பெற்று வாழ்ந்தான்.

*கருத்துரை :*— **நல்ல மனத்தோடு செய்யும் அன்பான உதவிகளே அறமாகும்; மற்றவையெல்லாம் வெறும் வெளிப் பகட்டேயாம்.**

★ ★ ★

# இளைஞன் எழுதிய கவிதை

வேலம்பட்டி என்ற ஊரிலே முத்து வடுகநாதன் என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள் தன் நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தான். அப்போது, எதுகை மோனைகளோடு கூடிய ஒரு வாசகத்தை அவன் பேசினான்.

அந்த வாசகம் அழகாயிருந்தது. அவன் நண்பர்களிலே ஒருவன் கூறினான், "முத்துவடுக நாதன் புலவர்களைப் போல் பேசுகிறான். அவன் பேசும் வாசகமெல்லாம் கவிதையாக வெளி வருகிறது!" என்று.

முத்து வடுகநாதனுக்கு நண்பன் பேச்சு பெருமை தருவதாயிருந்தது. தான் பேசுவது கவிதையாகவா இருக்கிறது என்று அவன் தன்னைத் தானே வியந்து கொள்ளத் தொடங்கினான்.

முத்து வடுகநாதன் கல்வி கற்றவனல்லன்; உள்ளூர்த் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டிருந்தான். அந்த ஆசிரியரின் பிரம்படிக்குப் பயந்து, ஆத்தி சூடி,

கொன்றை வேந்தன், நல்வழி, நன்னெறி, உலகநீதி முதலிய நீதிநூல்களை மனப்பாடம் செய்திருந்தான்.

அதற்கு மேல் அவனுக்கு இலக்கணப் பயிற்சியோ, இலக்கியப் பயிற்சியோ கிடையாது.

அவன் பேசும் வாசகமெல்லாம் கவிதையாக வெளி வருகிறது என்று நண்பன் வேடிக்கையாகப் பாராட்டிக் கூறியதை அவன் உண்மையாகவே எடுத்துக் கொண்டான். அன்று முதல் அவன் எழுத்தாணியும் ஓலையும் எடுத்துக் கொண்டு திரிந்தான் ஓய்வுள்ள போதெல்லாம் ஏதாவது சில வரிகளை ஓலையில் எழுதிக் கொண்டிருந்தான்.

எழுத எழுதப் பனையோலைகள் குவிந்தன. எழுதிய ஓலைகளின் எண்ணிக்கை நாள் ஆக ஆகப் பெருகியது.

நான்கு நான்கு அடியாக, ஏறக்குறைய ஆயிரம் கவிதைகளுக்கு மேல் அவன் எழுதி விட்டான். ஒரு நாள் அவன் தன் நண்பர்களை வீட்டுக்கு அழைத்து வந்தான்.

தான் எழுதிய ஓலைகளை அவர்கள் முன் பெருமையோடு விரித்து வைத்தான். சிந்தித்துச் சிந்தித்து அலங்காரமாக அவன் எழுதியிருந்த அந்தக் கவிதைகளை நண்பர்கள் படித்துப் பார்த்தார்கள். அவர்களும் முத்துவடுகநாதன் படித்த பள்ளிக் கூடத்திலே படித்தவர்கள்தாம்.

அவர்கள் முத்துவடுகநாதனை ஒரேயடியாகப் புகழத் தொடங்கி விட்டார்கள். "நண்பா, நீ எங்க

ளோடுதானே படித்தாய். இதெல்லாம் உனக்கு எப்படி வந்தது? தெய்வம் கனவில் வந்து கூறியதா? இல்லை, அருள் வந்து பாடினாயா?" என்று கேட்டார்கள்.

"நக்கீரர் முதலிய புலவர்களும் பாடி வைத்திருக்கிறார்களே, அவற்றைப் படிக்க முடிகிறதா? நமது முத்துவடுகநாதன் கவிதைகள் எவ்வளவு எளிமையாகவும் வெள்ளையாகவும் இருக்கின்றன!" என்று ஒரு நண்பன் கூறினான்.

"இது இயற்கையான கவிதை! எல்லோருக்கும் புரியும் கவிதை! எளிதில் பொருள் விளங்கும் கவிதை!" என்று மற்றொருவன் கூறினான்.

"ஆயிரக் கணக்கில் கவிதைகளை எழுதிப் பாயில் சுருட்டி வைப்பதால் பயனில்லை. முத்து வடுகநாதா, உன் கவிதைகள் தமிழ்நாடு முழுவதும் பரவ வேண்டும். அவ்வாறு பரவினால், வேலம்பட்டிக்குப் பெருமை உண்டாகும். அதற்கு உன் கவிதைகளைச் சங்கத்திலே அரங்கேற்றம் செய்ய வேண்டும்!" என்றான் ஒரு நண்பன்.

"சங்கத்திலே அரங்கேற்றம் செய்வதாயிருந்தால், புலவர்கள் பல கேள்விகள் கேட்பார்களாமே! அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லியாக வேண்டுமே!" என்று சிறிது அஞ்சிய குரலில் கூறினான் முத்துவடுகநாதன்.

"அதற்கெல்லாம் பயந்தால் முடியுமா? உன் கவிதை பொருள் விளங்காததாயிருந்தால் அல்லவா

அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். உள்ள பொருளை எடுத்துச் சொல்ல வேண்டியதுதானே?'' என்று ஒரு நண்பன் ஊக்கமூட்டினான்.

முடிவில் முத்து வடுகநாதன் எழுதிய ஆயிரங் கவிதைகளில் நல்ல கவிதைகளாக நூறு கவிதைகள் தேர்ந்தெடுத்து மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு அனுப்பி வைப்பதென்று முடிவாயிற்று. கவிதை களைத் தேர்ந்தெடுக்கும் வேலைகளை நண்பர்கள் மேற்கொண்டார்கள். அவர்கள் தத்தம் மனதுக்கு அழகாகவும் சிறப்பாகவும் தோன்றிய கவிதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஓலைகளின் மேல் 'வேலம்பட்டிக் கவிஞர் முத்து வடுகநாதர் இயற்றி யருளிய கவிதைத் திரட்டு' என்று ஒரு வாசகத்தை ஓர் ஓலையில் எழுதி வைத்துக் கட்டி, ஓர் ஆள் மூலம் மதுரைக்கு அனுப்பினார்கள்.

மதுரைக்கு ஓலைக்கட்டு எடுத்துச் சென்ற ஆள் ஐந்தாறு நாட்களில் திரும்பி வந்தான். அவன் கையில் கொடுத்து விட்ட ஓலைக்கட்டு அப்படியே இருந்தது.

''ஏன், சங்கத்தில் கொடுக்கவில்லையா?' என்று பரப்பரப்போடு கேட்டான் முத்து வடுக நாதன்.

''கொடுத்தேன். அங்கேயிருந்த ஒரு புலவர் ஓலைக் கட்டைப் பிரித்துப் பார்த்தார். ஐந்தாறு

ஏடுகளைப் புரட்டிப் பார்த்துவிட்டு, மறுபடியும் கட்டி என்னிடமே திருப்பித் தந்தார். 'இங்கேதான் கொடுக்கச் சொன்னார்கள். அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்து நாள் அறிவிக்கச் சொன்னார்கள்!' என்று நான் சொன்னேன். அவர் என்னை நோக்கி, 'தம்பி, இவை இங்கே செல்லுபடியாகா!' என்று கூறி என்னைத் திருப்பியனுப்பி விட்டார்!" என்று கூறினான் அந்த ஆள்.

இந்தச் செய்தியைக் கேட்ட முத்து வடுகநாத னுக்கு அவமானமாக இருந்தது. தன் நண்பர்கள் முகத்தில் விழிக்கவே வெட்கமாயிருந்தது.

"ஓலைச் சுவடியை வாங்கிப் பார்த்து விட்டுத் திருப்பிக் கொடுத்த புலவர் யார்?" என்று கேட்டான். அதற்கு அந்த ஆள், "அவர் யார் என்று கேட்டுக் கொண்டு வரவில்லை" என்று கூறி விட்டான்.

நண்பர்கள் செய்தியறிந்த போது முத்து வடுகநாதன் எதிர்பார்த்தபடி கேலி பேசவில்லை. முத்து வடுகநாதனைக் காட்டிலும் அவர்கள் அதிக மாக ஆத்திரப்பட்டார்கள். ஓலைக் கட்டைத் திருப்பியனுப்பிய புலவருக்குக் கவிதையுணர்வு இல்லாமலிருக்க வேண்டும்; அல்லது, அவர் அகம்பாவம் பிடித்தவராக இருக்க வேண்டும் என்று கருதினார்கள்.

வேலம்பட்டியை யடுத்து அரசம்பட்டி என்று ஒரு சிற்றூர் இருந்தது. அரசம்பட்டியில் மங்லகங்கிழார் என்றொரு பெரும் புலவர் இருந்தார்.

நண்பர்கள் முத்து வடுகநாதனை அழைத்துக் கொண்டு அந்த ஓலைச் சுவடிகளுடன் அரசம் பட்டிக்குச் சென்றார்கள். மங்கலங்கிழார் அந்தக் கவிதைகளைப் பற்றி என்ன சொல்கிறார் என்று தெரிந்து கொண்டு மதுரைக்குச் சென்று சங்கப் புலவர்களோடு வாதிடுவது என்பது அவர்கள் திட்டம்.

அவர்கள் மங்கலங்கிழார் வீட்டையடைந்த போது, அவர் அங்கில்லை. பக்கத்தில் உள்ள பூஞ்சோலைக்குச் சென்றிருப்பதாகக் கூறினார்கள். உடனே, இளைஞர்கள் அந்தப் பூஞ்சோலைக்கே சென்றார்கள்.

இளைஞர்கள் சோலைக்குப் போய்ச் சேர்ந்த போது மங்கலங்கிழார் ஒரு மேடை மீது அமர்ந்து, சோலைப் பறவைகளின் அழகில் ஈடுபட்டிருந்தார். இளைஞர்கள் சிலர் தம்மைப் பார்க்க வந்திருப்பதை யறிந்தவுடன், அவர்களை அன்புடன் வரவேற்று தம்மருகில் மேடையின் மீது அமரும்படி கேட்டுக் கொண்டார்.

இளைஞர்களை நோக்கி அவர்கள் வந்த நோக்கத்தை விசாரித்தார்.

அவர்கள் நடந்ததெல்லாம் விரிவாகக் கூறினார்கள்.

மங்கலங்கிழார், அவர்கள் கொண்டு போயிருந்த ஓலைச் சுவடியை வாங்கினார். அதில் ஓர் ஏட்டைப்

பார்த்தவுடனேயே அவர் அதை மறுபடியும் கட்டித் தம் அருகில் வைத்து விட்டார்.

அவருடைய செயலைக் கண்டு முத்துவடுக நாதனும் அவன் நண்பர்களும் இடிந்து போனார்கள்.

வானம் இருண்டு கொண்டு வந்தது.

மங்கலங்கிழார், "அதோ பாருங்கள்! அதோ பாருங்கள்!" என்று ஒரு திசையில் சுட்டிக் காட்டினார். இளைஞர்கள் திரும்பிப் பார்த்தனர்.

கார்மேகத்தைக் கண்டு ஒரு மயில் எழில் தோகை விரித்துக் களிநடனம் ஆடிக் கொண் டிருந்தது. அதன் அருகில் நின்ற வான்கோழி, மயில் ஆடுவதைப் பார்த்துக் தானும் தன் சிறகை விரித்து ஆடிக் கொண்டிருந்தது.

மயிலின் நடனத்தையும், வான்கோழியின் ஆட்டத்தையும் ஒன்றாகக் கண்ட அந்த இளைஞர்களை நோக்கி, "இப்போது புரிகிறதா, உங்கள் நண்பன் எழுதிய கவிதைகள் எப்படிப் பட்டவை என்று?" எனக் கேட்டார் மங்கலங்கிழார்.

இளைஞர்கள் நாணித் தலை குனிந்தனர்.

*கருத்துரை* :— **இலக்கண இலக்கியங் கல்லாதவனுடைய கவிதைகள் நல்ல கவிதைகள் ஆகா. அவற்றைச் சான்றோர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.**

★ ★ ★

# இளநீர் குடித்த இளைஞன்

மகன் கிணற்றடியிலே குளித்துக் கொண்டிருந்தான். அவன் குளித்த நீர் நாலா பக்கமும் ஓடிக் கொண்டிருந்தது. பயனின்றிப் பரவிச் செல்லும் அந்த நீரை அவன் தந்தை பார்த்தார்.

"தம்பீ, அதோ அந்தப் பக்கத்தில் நிற்கும் தென்னங் கன்றுக்குப் பாயும்படி ஒரு வாய்க்கால் வெட்டிவிடு" என்று சொன்னார், தந்தை.

'இதென்ன வெட்டி வேலை!' என்று மகன் மனதுக்குள்ளே நினைத்துக் கொண்டான். ஆனால், தந்தையின் சொல்லை மீற முடியாமல், கிணற்றடி நீர் தென்னங் கன்றுக்குப் பாயும்படி வாய்க்கால் வெட்டி விட்டான்.

அன்று முதல் நாள்தோறும் அவர்கள் குளிக்கும் நீர் வாய்க்கால் வழியாக ஓடி தென்னங் கன்றுக்குப் பாய்ந்து கொண்டிருந்தது. தென்னங் கன்றும் நன்றாக வளர்ந்து வந்தது.

மகன் வெளியூருக்குப் படிக்கப் போய்விட்டான். பள்ளியைச் சேர்ந்த விடுதியிலேயே தங்கிப்

படித்தான். பத்தாண்டுகளாக அவன் வெளியூரிலேயே தங்கியிருந்தான். இடையிடையே விடுமுறைக்கு வருவான். வீட்டில் ஓரிரு நாட்கள் தங்கிச் சென்று விடுவான். பெரிய விடுமுறைகளில் அவன் வீட்டில் பத்து இருபது நாட்கள் தங்கினாலும், நாள்தோறும் கிணற்றடியிலேயே குளித்தாலும், தென்னங் கன்றின் வளர்ச்சியைக் கவனிக்கவில்லை.

பத்தாண்டுகளுக்குப் பிறகு, பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு, ஊருக்குத் திரும்பி வந்தான்.

கோடை காலம். வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. எங்கும் ஒரே வறட்சி. ஒரு நாள் பக்கத்து ஊரைச் சேர்ந்த அவனுடைய பள்ளித் தோழன் ஒருவன் அவனைப் பார்க்க வந்திருந்தான். அவன் ஏதோ ஓர் உதவி கேட்பதற்காக வந்திருந்தான். வந்தவன், வெயிலில் வந்த களைப்பால் தா வறண்டு போயிருந்ததால், தண்ணீர் கேட்டான்.

இளைஞன், தண்ணீர் மொண்டு வர அடுக்களைக்குச் சென்றான்.

"வந்த விருந்தாளிக்கு வெறுந் தண்ணீரையா கொடுப்பது? அதோ கொல்லைப் புறத்தில் இருக்கும் தென்னை மரத்தில் இரண்டு இளநீர் பறித்துக் கொண்டு வா. நண்பனுக்குக் கொடுத்து நீயும் சாப்பிடு!" என்றாள் தாய்.

இளைஞன் அவ்வாறே மரத்தில் ஏறி இரண்டு இளநீர் பறித்துக்கொண்டு இறங்கினான். அவற்றைச்

சீவி நண்பனுக்கு ஒன்று கொடுத்தான்; ஒன்றைப் பருகினான்.

"ஆகா! என்ன இனிப்பு! நண்பா, இந்தக் கோடை வெப்பத்துக்கு, இந்தக் குளிர்ந்த இளநீர் எவ்வளவு இன்பமாக இருக்கிறது!" என்று நண்பன் பாராட்டிப் பேசினான்.

உள்ளபடியே இளநீர் மிக இனிப்பாக இருந்தது.

அப்போது இளைஞன் மனதில் பத்தாண்டு களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி நினைவில் தோன்றியது. தந்தையின் கட்டாயத்தின் பேரில் தான் கால் வாய் வெட்டிய காட்சி மனக்கண் முன் தோன்றியது.

என்றோ ஒரு நாள் பலனை எதிர்பாராமல் அவன் அந்தத் தென்னை மரத்திற்குத் தண்ணீர் பாயச் செய்தான். அத் தென்னை மரம் தன் தாளிலே பெற்ற நீரைத் தலையிலே தாங்கித் தந்தது. அந்த நீர்தான் எவ்வளவு சுவையாக இருக்கிறது!

ஒருவருக்குச் செய்கின்ற உதவி வீண் போவதில்லை உதவி செய்யும்போது ஒருவருடைய துன்பத்தைத் தீர்த்தோம் என்ற மன நிறைவு ஏற்படுகிறது. அதைத் திரும்பப் பெறும்போதோ, இளநீரின் இனிமை போல், அது இன்பமாக இருக்கும் என்பதில் ஐயமுண்டோ!

இப்படி யெல்லாம் எண்ணிப் பார்த்த அந்த இளைஞன் தன்னைத் தேடி வந்த தோழனுக்கு அவன் வேண்டிய உதவியைச் செய்தான். அந்த நண்பனும் மன மகிழ்ச்சியோடு தன் ஊருக்குத் திரும்பிச் சென்றான்.

*கருத்துரை :—* **பலனை எதிர்பாராமல் செய்கின்ற உதவி வீண் போகாது.**

★ ★ ★

# எலி வேட்டையும் புலி வேட்டையும்

ஓர் ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் சின்னத்தம்பி. இன்னொருவன் பெயர் பெரியதம்பி. இருவரும் உயிர் நண்பர்கள்.

சின்னத்தம்பி ஒரு குயவனிடம் வேலை பார்த்து வந்தான். பெரியதம்பி ஒரு கொல்லனிடம் வேலை பார்த்து வந்தான். குயவன் கொடுத்த கூலி சின்னத் தம்பிக்குப் போதாமல் இருந்தது. அதனால் அவன் கூட ஒரு தொழில் பார்த்து வந்தான். அந்தத் தொழில் என்னவென்றால், எலி பிடிப்பதுதான். கொல்லன் கொடுத்த கூலி பெரியதம்பிக்குப் போதவில்லை. ஆனால், அவன் பார்ப்பதற்கு வேறு தோதான தொழில் எதுவும் அமையாததால், கிடைத் ததைக் கொண்டு மன நிறைவுடன் வாழ்ந்து வந்தான்.

அந்த ஊரில் எலித் தொல்லை அதிகம். எலி களைப் பிடிப்பதற்கு அக்காலத்தில் எலிப் பொறிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால், ஊர் மக்கள் சின்னத்தம்பியின் உதவியையே நாட வேண்டி யிருந்தது.

யார் வீட்டிலாவது எலிகள் அட்டகாசம் செய்தால், உடனே சின்னத்தம்பிக்கு ஆள் அனுப்புவார்கள். அவன் தன் முதலாளியான குயவனிடம் அனுமதி வாங்கிக் கொண்டு, அந்த வீட்டுக்குச் செல்லுவான். எலிகள் குடியிருக்கும் வளைகளையும், அவை வரும் வழிகளையும் ஆராய்வான். இரவில் அவை வந்து அட்டகாசம் செய்யும் அறைகளைப் போய்ப் பார்ப்பான்.

அன்று இரவே அந்த வீட்டுக்குச் செல்வான். கையில் சில தேங்காய்த் துண்டுகளைக் கொண்டு செல்வான். அவற்றை அறையில் அங்கொன்றும் இங்கொன்றும் போட்டு வைப்பான். ஒரு தடிக் கம்பை ஓங்கிப் பிடித்தபடி, ஒரு மூலையில் பதுங்கி உட்கார்ந்திருப்பான்.

தேங்காய் வாசம் மூக்கில் பட்டவுடன், எலிகள் ஆனந்தமாக அந்த அறைக்குள் ஓடிவரும். யாரும் இருக்கிறார்களா என்று இருட்டுக்குள்ளே கண்களை விழித்துப் பார்க்கும். ஓசை எதுவும் கேட்கிறதா என்று செவியைத் தீட்டிக் கொண்டு கவனிக்கும். சின்னத்தம்பி மூச்சு விடாமல், ஆடாமல் அசையாமல், மூலையில் உட்கார்ந்திருப்பான்.

யாரும் இல்லை என்று நிச்சயித்துக் கொண்டே எலி சுதந்திரமாகப் பாய்ந்து வந்து தேங்காய்க் கீற்றைக் கடித்து இழுக்கும். அவ்வளவுதான், கண் மூடிக் கண் திறப்பதற்குள் படீரென்று தடிக் கம்பு அதன் முதுகில் விழும். எலி நசுங்கிச் செத்துப் போகும்.

ஓர் எலிக்கு ஒரு பணம் வீதம் சின்னத்தம்பி கொல்லும் எலிகளுக்குப் பணம் எண்ணிக் கொடுப் பார்கள்.

சின்னத்தம்பிக்கு எலி வேட்டையில் மேல்வரும் படி கிடைத்து வந்தது. இதனால் அவன் அந்தத் தொழிலைக் கடைசிவரையில் விடாமல் நடத்தி வந்தான்.

அந்த ஊருக்குப் பக்கத்தில் ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டில் ஒரு புலி இருந்தது. அது ஒரு முறை தற்செயலாக ஊருக்குள் வந்தது. ஊரில் ஒரு குடிசைக்குப் பின்னால் மரத்தடியில் கட்டிக் கிடந்த ஆட்டை அடித்துக் கொன்று தின்று விட்டது. பிறகு அந்தப் புலி நாள்தோறும் வந்தது. வெட்ட வெளிகளிலும், தோட்டங்களிலும் கட்டிக் கிடந்த ஆடு மாடுகள் அதற்குப் பலியாகிக் கொண்டு வந்தன.

புலியின் கொடுமையை ஊர் மக்களால் தாங்க முடியவில்லை. எலி பிடிக்கும் சின்னத்தம்பியிடம் சிலர், "நீ அந்தப் புலியைப் பிடித்து ஊர் மக்கள் தொல்லையைத் தீர்த்தால் என்ன ?" என்று கேட் டார்கள்.

"எனக்கு எலி பிடிக்கத்தான் தெரியும். புலி பிடிக்கத் தெரியாது!" என்று சின்னத்தம்பி சொல்லி விட்டான், இந்தப் புலியைக் கொன்று ஊரைக் காப் பாற்றக் கூடிய ஆள் நம் ஊரில் இல்லையே!" என்று மக்கள் கலங்கினார்கள்.

ஒரு நாள் அந்த ஊர்க் கொல்லனுடைய கன்றுக் குட்டியைப் புலி கொன்று தின்று விட்டது. கொல்லன் மிகவும் துயரத்தோடு இருந்தான்.

அவன் துயரத்தைக் கண்ட பெரியதம்பி, "ஐயா! எனக்கு அனுமதி கொடுங்கள். நான் காட்டுக்குப் போய் அந்தப் புலியைக் கொன்று வருகிறேன்!" என்றான்.

"நீயா?" என்று வியப்புடனும் அவநம்பிக்கையுடனும் கேட்டான், கொல்லன்.

"ஆம்! நானேதான்! எனக்கு ஒரு வேலும் உங்கள் அனுமதியும் ஆசியும் கிடைத்தால் போதும்!" என்று உறுதியான குரலில் கூறினான் பெரியதம்பி.

கொல்லன், அவன் நிமிர்ந்து நின்ற தோற்றத்தையும் கம்பீரமான பேச்சையும் கண்டான். சிறிது நம்பிக்கைதோன்றியது. "போய்வா!" என்று அனுமதி கொடுத்தான். "வெற்றியோடு திரும்பி வா" என்று ஆசி மொழி கூறினான். புதிதாக வடித்த ஒரு வேல் எடுத்துக் கொடுத்தான்.

பெரியதம்பி காட்டுக்குச் சென்றான். புலியிருக்கும் இடத்தைத் தேடினான். கடைசியில் ஒரு குகை வாசலில் அந்தப் புலி நிற்பதைக் கண்டான்.

மனித வாடை அடித்ததும், அந்தப் புலி பெரிய தம்பி நின்ற பக்கம் திரும்பியது. அவன் மீது பாய

ஆயத்தமாகியது. சுறுசுறுப்புடன் பெரியதம்பி தன் வேலை ஓங்கி அதன்மீது எறிந்தான். வேல் புலியின் விலாப்புறத்தில் பாய்ந்தது. அது தடாலென்று சாய்ந்தது.

செத்து விட்டது புலி என்று எண்ணிக்கொண்டு பெரியதம்பி புலியை நெருங்கினான். ஆனால், அது சாகவில்லை. சாகும் அளவுக்கு வேல் ஆழமாகப் பாயவில்லை. பெரியதம்பி நெருங்கியவுடன் அது திடீரென்று எழுந்தது. பாய்ந்து தாக்கியது.

பெரியதம்பி பயந்து சும்மா இருந்து விடவில்லை. அதனோடு போராடினான். அது தன் கால் நகங்களால் உடல் முழுவதிலும் கீறுவதையும் பொருட்படுத்தாமல் அதனோடு மல்லுக்கட்டி நின்றான். தன் வலிவை எல்லாம் பயன்படுத்தி அதன் வாயைப் பிளந்து கிழித்தான். அதன் விலாவில் பாய்ந்து தொங்கிக் கொண்டிருந்த வேலைப் பிடுங்கி அதன் தொண்டையில் செலுத்தினான். வாயைப் பிளந்து கொண்டு அது தன் கடைசி மூச்சை விட்டது.

இறந்து போன அந்தப் புலியை இழுத்துக் கொண்டே ஊர் எல்லைவரை வந்து விட்டான். அதற்கு மேல் அவனால் நடக்க முடியவில்லை. புலி தன் நகத்தால் கீறிய காயங்களிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டே வந்ததால் அவன் வலுவெல்லாம் பறந்து விட்டது. சோர்ந்து போய்க் கால்கள் தடுமாறிக் கீழே விழுந்து விட்டான்.

பக்கத்து வயலில் வேலை செய்து கொண்டிருந் தவர்கள் இந்தக் காட்சியைக் கண்டு ஓடி வந்தார்கள். பெரிய தம்பியையும் அவன் இழுத்துக் கொண்டு வந்த புலியையும் கண்டு அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால், பெரிய தம்பியை உடனே மருத்துவரிடம் கொண்டு போகாவிட்டால் அவன் பிழைக்க மாட்டான் என்று தோன்றியது. ஆகவே, அவனை அப்போதே ஊர் மருத்துவர் வீட்டுக்குத் தூக்கிச் சென்றார்கள்.

பெரியதம்பி புலியைக் கொன்ற செய்தியும், அவன் மருத்துவர் வீட்டில் கிடக்கும் செய்தியும், ஊர் முழுவதும் பரவி விட்டது. சின்னத்தம்பியும் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டான். அவன் உடனே மருத்துவர் வீட்டுக்கு வந்தான். பெரிய தம்பிக்கு ஏற்பட்டிருந்த பலமான காயங்களையும், மருத்துவர் அவற்றிற்குப் போட்டிருந்த பெரிய கட்டுகளையும் கண்டு மலைத்துப் போய் நின்று விட்டான். பெரியதம்பி அப்போதுதான் கண் விழித் தான். சின்னத்தம்பியைக் கண்டு சிரிக்க முயன்றான்.

"பெரியதம்பி, நீ ஏன் இந்த ஆபத்தான வேலைக்குப் போனாய்?" என்று கேட்டான் சின்னத்தம்பி. பெரியதம்பியால் பேசவே முடிய வில்லை.

சில நாட்களில் பெரியதம்பி, மருத்துவரின் பெரு முயற்சியால், முற்றிலும் உடல் நலம் பெற்று விட்டான்.

அவன் புலியைக் கொன்று ஊரைக் காப்பாற்றியதற்காக ஊர் மக்கள் ஒரு விழாக் கொண்டாட ஏற்பாடு செய்தார்கள். பெரியதம்பியைக் குதிரையில் ஏற்றி வைத்து ஊர்வலம் வந்தார்கள். அவன் கழுத்தில் மலர் மாலைகளைக் கொண்டு வந்து போட்டார்கள்.

இவற்றையெல்லாம் சின்னத்தம்பி பார்த்தான். அருகில் நின்ற ஒருவனிடம், "ஊருக்குத் தொந்தரவு கொடுத்த எலிகளை நான் பிடித்துக் கொல்கிறேன். ஒரு நாளைக்குப் பத்துப் பன்னிரண்டு எலிகளைப் பிடித்து வருகிறேன். என்னைப் பாராட்டுவார் ஒருவர் கூடக் கிடையாது. பெரியதம்பி ஒரே ஒரு புலியைக் கொன்றதற்காக ஊரே திரண்டு விழாக் கொண்டாடுகிறார்கள்! இது என்ன நியாயம்?" என்று கேட்டான்.

அதற்கு அந்த மனிதன் பதில் சொன்னான்: 'எலியைக் கொல்வதில் வீரம் இல்லை. புலியைக் கொல்வதில் வீரம் இருக்கிறது. எளிய செயல் இலட்சம் புரிந்தாலும் பெருமையில்லை. அரிய செயல் ஒன்று செய்தாலும் பெருமையுண்டு தெரிந்து கொள்" என்றான்.

இதைக் கேட்ட சின்னத்தம்பி வெட்கத்துடன் தலை குனிந்தான்.

*கருத்துரை :—* **செய்தற்கு அரிய செயல்களைச் செய்வோரே பெரியோராகக் கொண்டாடப்படுவார்கள்.**

★ ★ ★